விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 153 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 07 ஞாயிற்றுக்கிழமை (21.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# அரசியல் தீர்வுக்கான பேச்சு நிச்சயம் வெற்றியடையும்

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை வெளியீடு



(கொழும்பு)

**தமிழ்க் கட்சிகளுடன் நான் ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சு நிச்சயம் வெற்றியடையும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

சர்வதேச ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதில் வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தியில் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது.

எனினும் வடக்குக் கிழக்கு 19

## வவுனியாவில் சீனித் தொழிற்சாலைக்காக ஆயிரம் ஏக்கரில் கரும்பு செய்கை

### பின்னணியில் சீனா; அரசை எச்சரித்த இந்தியா

(வவுனியா)

வவுனியாவில் அமைக்க அனுமதி கோரப்பட்டுள்ள கரும்பு பண்ணையுடனான சீனித் தொழிற்சாலையின் பின்னணியில், சீனா இருப்பதாக இந்தியா சந்தேகமடைந்துள்ளதாக அறிய முடிகிறது.

வவுனியா வடக்கு பகுதியில் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் கரும்பு செய்கையும், சீனித் தொழிற்சாலையும் அமைக்கும் திட்டம், கொழும்பு - மத்திய அரசின் மூலம் வேகமாக நகர்த்தப்பட்டு வருகிறது.

7 வருடங்களின் முன்னர் வடமாகாண சபை ஆட்சிக்காலத்தில் 19

## கடன் மறுசீரமைப்பு ஜி7 நாடுகள் வரவேற்பு

(ஹிரொஸிமா)

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் இணைத் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்துக்கு ஜி7 நாடுகளின் கூட்டணி வரவேற்பு தெரிவித்துள்ளது.

ஜப்பானின் ஹிரொஸிமா நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஜி7 நாடுகளின் தலைவர்களது 49 ஆவதுமாநாடு இன்று 19

## வடக்குக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களின் பெயர் விபரங்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தேசியகல்வியியற்கல்லூரிகளில் கற்பித்தல் தொடர்பான தேசிய போதனாவியல் டிப்ளோமாவினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து வெளியேறியவர்களில் மத்திய கல்வி அமைச்சினால் வட மாகாண பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக வட மாகாண 19

## வடக்குக் கிழக்கிலுள்ள விகாரைகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்குக

### அஸ்கிரிய மகாநாயக்கர் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

- இனவாத, மதவாத பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுங்கள்.
- தொல்லியல் வேலைத்திட்டங்களுக்கு வெளித்தரப்பின் உதவியை பயன்படுத்துக.

அஸ்கிரிய மகா விகாரையின் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரினால் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் தற்போது நாட்டின் பல்வேறு பகுதி 19

## வடக்கு மாகாண ஆளுநர் திங்கள் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்

(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமனம் பெற்றுள்ள வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் கடமைகளைப் பொறுப்பேற்கும்நிகழ்வு நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் குறித்த நிகழ்வு நடைபெறவுள்ளது. 19

பொலிகண்டியில்

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

பொலிகண்டியில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று சனிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பாலாவித்தெரு, பொலி 19

## இலத்திரனியல் கடவுச்சீட்டை அமுல்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் இந்த வருடம் முதல் இலத்திரனியல் கடவுச்சீட்டை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

குடிவரவு மற்றும் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
21
05
1950

விண்ணில்
19
05
2015

## அமரர் முருகேசு கந்தசாமி

(உரிமையாளர் - ராஜன் எலக்ரிக்கல்ஸ், பருத்தித்துறை)

அன்பின் ஊற்றாகி எம்
ஆழ்மனங்களில் பதிந்திருக்கும்
எம் அருமையானவரே
வருடங்கள் எட்டு ஓடி மறைந்ததப்பா
உங்கள் நினைவுகள் எம் மனங்களில்
என்றும் மாறாது அப்பா
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
வாழுகின்றோம் நாம்

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

4-ம் குறுக்குச் சந்தி,
தும்பளை வீதி, பருத்தித்துறை. (C-6590)

தகவல் -
குடும்பத்தினர்


# UK Visit Visa

UK visit விசாவைப் துரிதமாகப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றீர்களா?
10 நாட்களில் உங்கள் கைகளில் Visit விசா.
பதிவுக் கட்டணத்துடன் விண்ணப்பிக்க நம்பிக்கையுடன் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

Hybrid International Hub (pvt) Ltd,Jaffna
076 250 0098, 077 815 5920
021 222 1265 (C-6583)

## செய்தி வாசிப்பாளர்கள் தேவை

ஊடகத்துறையில் அனுபவம் வாய்ந்த அல்லது ஆர்வமுள்ள செய்தி வாசிப்பாளர்கள் (பெண்கள்) தேவை.

077 779 1929

## கிளிநொச்சியில் வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் உத்தியோகத்தர்கள் அல்லது பல்கலைக்கழக மாணவர்கள் தங்குவதற்கு வீடு வாடகைக்கு உண்டு.

076 097 3127

## தேவை

கிளிநொச்சியில் இயங்கிவரும் வியாபார நிறுவனமொன்றிற்கு
- கணக்காளர்
- கணக்குப்பதிவாளர்

தேவை.

076 940 8589

## விற்பனைக்கு

BAF தொடர் இலக்கமுடைய பெண்களுக்கான Pleasure motor bike ஒன்று விற்பனைக்கு உண்டு.

075 742 7608

## சண்டிலிப்பாயில் 9 பரப்பு 16 குழி காணி விற்பனைக்கு

- காணி சகல ஆவணங்களும் உடையது
- பிரதான வீதி முகப்பு 300 அடிக்கு மேல் உள்ளது
- இரண்டு பிரிவுகளாக மட்டும் பிரித்துக் கொடுக்கப்படும்
- நன்னீர் வளம் மற்றும் அமைதியான சூழலில் உள்ளது
- சொகுசு வீடுகள் மற்றும் திருமண மண்டபம் வணிக காட்சியறைகள் அமைக்க ஏற்ற இடம்.
- தரகர்கள் வேண்டாம்.

076 494 1987


# 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
1955 - 05 - 24



மறைவு
2021 - 06 - 12

அமரர்

## மாணிக்கம் சிவானந்தசிவம்

(21.05.2023 ஞாயிற்றுக்கிழமை)

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உம் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல் எம் நெஞ்சமதில்
எப்பொழுதும் இருப்பீர் ...

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(கஜானன், கானுஷன், சாரிக்கன், ஜாமிஷன்)

குடத்தனை மேற்கு
[வதிரி]

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31 . 08 . 1937



மறைவு
21 . 05 . 2017

அமரர்

## திருமதி சின்னையா பொன்னு

உன் உடலில் சுமந்தாய்
உயிர்தந்தாய்
உணர்வும் தந்தாய்
உருவம் தந்தாய்
உரமிட்டாய்
உரமாக்கினாய்
உணவிட்டாய்
உபாயங்களை கூறி-நல்
உறவுதந்தாய்
உயர்வுதந்தாய்
உலகைக் காட்டினாய்
உவமித்தாய்-எம்
உயிரும் நீயே
உணர்வும் நீயே
உனைப்பிரிந்து ஆறு
வருடங்கள் அம்மா-எம்
உயிரில் கலந்தாய்
உளமெலாம் நிறைந்தாய்
உன் பிரிவின் வலி
ஊழி வரைதொடரும் அம்மா
ஊழி வரைதொடரும்...

உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 21.04.2023 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

## இரத்தினம் செல்வராசா





தோற்றம்
05.08.1949

மறைவு
21.04.2023

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் **இன்று 21.05.2023** ஞாயிற்றுக்கிழமை நண்பகல் **12.00** மணியளவில் ஆடியபாதம் வீதி திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள **"சிவகாமி மண்டபத்தில்"** நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

இல.26, 3ம் ஒழுங்கை அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

077 311 7875


இங்ஙனம்
குடும்பத்தினர்.

(15579)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்ரான் விடயத்தில் திரைமறைவில் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை

## மார்க்ரம் கருத்தால் சர்ச்சை






ஐதராபாத்தில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் ஐதராபாத் - பெங்களூர் அணிகள் மோதின.

இதில் முதலில் பட்டிங் ஆடிய ஐதராபாத் கிளா செனின் அதிரடி சதத்தால் 186 ரன்கள் குவித்தது. இதை யடுத்து இலக்கை விரட்டிய பெங்களூரு அணி விராட் கோலியின் அசத்தல் சதம் மற்றும் டு பிளெஸ்சிஸியின் அதிரடி ஆட்டத்தால் 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் மணிக்கு 150 கி.மீ வேகத்தில் பந்துவீசும் உம் ரான் மாலிக்குக்கு இடம் அளிக்கவில்லை. உம்ரான் கடந்த சில ஆட்டங்களாகவே அணியில் இடம் கிடைக்காமல் வெளியே உட்கார வைக்கப்பட்டார்.

இந்நிலையில் உம்ரான் மாலிக் விஷயத்தில் திரை மறைவில் என்ன நடக்கிறது என தனக்கே தெரியவில்லை என ஐதராபாத் அணியின் கப்டன் எய்டன் மார்க்ரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, "உண்மையை சொல்ல வேண்டுமென்றால் என்ன நடக்கிறது என்பதை உறுதியாக சொல்ல முடியவில்லை. மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீசும் தனித்திறன் கொண்ட வீரர் உம்ரான். இருந்தும் அவரது விஷயத்தில் திரை மறைவில் என்ன நடக்கிறது என்றே எனக்கு தெரியவில்லை" என தெரிவித்தார். அவரது இந்த பதில் சர்ச்சையை எழுப்பி உள்ளது. கடந்த ஐ.பி.எல் சீசனில் ஐதராபாத் அணிக்காக 22 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தி இருந்தார் உம்ரான். அதிவேகப் பந்துவீச்சுக்காக பரவலாக அறியப்படுபவர். நடப்பு ஐ.பி.எல் சீசனில் அவர் 7 இன்னிங்ஸ் மட்டுமே விளையாடி உள்ளார்.

அதன் மூலம் 5 விக்கெட்டுகளை மட்டுமே கைப்பற்றி உள்ளார். இந்திய அணியிலும் விளையாடி வருகிறார். இதற்கு முன்னர் சன்ரை சர்ஸ் ஹைதராபாத் அணியின் கப்டனாக செயற்பட்ட வோர்னர், 2021 சீசனின் போதே கப்டன் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு அந்த சீசனில் ஆடும் லெவனிலும் வாய்ப்பு மறுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (4)

# ரஜினி-கபில்தேவ் சந்திப்பு



இந்திய திரையுலகின் முன்னணி நடிகரான ரஜினிகாந்த் தற்போது நெல்சன் திலீப் குமார் இயக்கத்தில் "ஜெயிலர்" படத்தில் நடித்து வருகிறார்.

மேலும் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கத் தில் உருவாகி வரும் லால் சலாம் படத்தில் ரஜினி சிறப்பு தோற்றத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பிற்காக ரஜினி அண்மையில் சென்னையிலிருந்து விமானம் மூலம் மும்பைக்கு சென்றார்.

இந்நிலையில் நடிகர் ரஜினிகாந்த் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவை சந்தித்துள்ளார்.

இவர்கள் இருவர் எடுத்துக் கொண்ட புகைப்படம் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. (4)


**உடல் எடை குறைய வேண்டுமா?**

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாட்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

**தலை முடி நீளமாக வளர வேண்டுமா?**

தலைமுடிவளர வேண்டுமா?, பேன், பொடுகு தொல்லையா? முடிகொட்டுகிறதா?, இளநரையா?, தலையிடியா, முடி அடர்த்தி இல்லையா?, புதிதாக முடி முளைக்க வேண்டுமா?, பொன்னாங்காணி?, கரிசிலாங்காணி, இலாமிச்சைவேர், கருவேப்பிலை, வல்லாரை,நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப் பாவித்து பயனடைய

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா**

எடை கூடவேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்பு கூடவேண்டுமா?, உடல் குறைபாடுகளா .

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

(15583)

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


# சேப்பாக் மைதானத்தை டோனிக்கு பரிசாக வழங்கிய ரசிகர்



தத்ரூபமாக வடிவமைக்கப்பட்ட சேப்பாக்கம் மைதானத்தின் மாதிரியை டோனிக்கு ரசிகர் ஒருவர் பரிசாக வழங்கியுள்ளார்.

16 ஆவது ஐ.பி.எல் கிரிக் கெட் போட்டி மிகவும் விறு விறுப்பாக இந்தியாவில் பல மாநிலங்களில் நடைபெற்று வருகிறது. கடந்த 14 ஆம் திகதி சென்னை சேப்பாக்கத்தில் லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர் ஸ°ம் நேருக்கு நேர் மோதிக் கொண்டனர்.

இப்போட்டியில் கொல்கத்தா அணி வெற்றி பெற்றது. இப்போட்டி முடிந்த பின்பு, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியினரும் டோனியும் மைதானத்தில் திரண்டிருந்த ரசிகர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்தனர்.

இந்நிலையில், சமூக வலைத் தளங்களில் ஒரு வீடியோ வைரல்ாகி வருகிறது.

அந்த வீடியோவில், தத் ரூபமாக வடிவமைக்கப்பட்ட சேப்பாக்கம் மைதானத்தின் மாதிரியை, சிஎஸ்கே கப்டன் டோனிக்கு ரசிகர் ஒருவர் பரிசாக வழங்கியுள்ளார். அந்த பரிசை டோனி வியந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்.

தற்போது இது தொடர்பான வீடியோ இணைய தளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது. (4)


**2022 O/L**

**மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு**

**விஞ்ஞானம்** | ஆசிரியர் **S.கோபிநாத்**

**காலம்** மே 22,23 திங்கள், செவ்வாய்க்கிழமை (மாலை 3.30 மணி முதல் 6.30 மணி வரை

**குறிப்புகள்**

- ஆர்வமுள்ள வெளி மாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புகளும் வழங்கப்படும்.
- பரீட்சை சுருக்கக் குறிப்புகள் வழங்கப்படும்.
- கட்டணத்தை செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.

(15586)

**தீபம் கல்வி நிலையம்**

டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 077 224 7781 நிர்வாகம்


# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1953 . 05 . 31 | 2023 . 05 . 20 |



## ஆனந்தசிங்கம் கனகாம்பிகை

சுழிபுரத்தினை பிறப்பிடமாகவும் பன்னாலை, தெல்லிப்பளையினை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தசிங்கம் கனகாம்பிகை அவர்கள் நேற்று (20.05.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரதராஜா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் ஆனந்தசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் கனகேஸ்வரி, ஞான்சம்பந்தன் மற்றும் காலஞ்சென்ற கனகலிங்கத்தின் அன்புச் சகோதரியும், நகுலேஸ்வரியின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சுப்பையா - கனகபூசணத்தின் பெறாமகளும் சரவணபவன் (பிரான்ஸ்), கிரிஜா (ஆசிரியை, யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை), அனுசுஜா (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரங்கதாஸ் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பிரதேச சபை வலிகாமம் வடக்கு), அருணன் (பொறியியலாளர்- அவுஸ்திரிரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பவினேஸ், கவிலயா, ஆதினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.05.2023) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்பொன்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பளை.

தகவல் : குடும்பத்தினர்
077 959 0696
077 374 8917

(15585)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் காணாமல்போன மாணவி புத்தளத்தில் மீட்பு

(மன்னார்)

காணாமல் போன மன்னார் - முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பண்டாரவெளி, மணற்குளம் ரிகாஷா (வயது- 15) என்ற மாணவி நேற்று முன்தினம் மாலை புத்தளத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மாணவியின் தந்தை தெரிவித்துள்ளார்.

மாணவி ரிகாஷா கடந்த வியாழக்கிழமை காலையிலிருந்து காணவில்லை என தெரிவிக்கப்பட்டது. பண்டார வெளி முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் 10 இல் குறித்த மாணவி கல்வி கற்று வருவதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

மாணவி காணாமல் போனது தொடர்பாக பெற்றோர் சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில், மாணவி நேற்று புத்தளத்தில் வைத்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கபட்டுள்ளது. (4)

# மரண அறிவித்தல்



## திருமதி. சங்கரப்பிள்ளை கனகம்மா

யாழ்ப்பாணம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சங்கரப்பிள்ளை கனகம்மா அவர்கள் நேற்று 20.05.2023 சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதி, சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிங்கராசா, பரிபூரணம், தம்பித்துரை,முருகையா மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்றவர்களான தம்பு, பூரணம் அவர்களின் அன்பு மைத்துனியும்,

நவரத்தினம், செல்வராசா, சற்குணராசா, விக்கினேஸ்வரி, தவமலர், சண்முகலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராணி, குணவதி, கோகிலா, மனோகரன், குலேந்திரன், விஜய பாரதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிதர்சன்- சருந்தினி, சுதேசன்-தர்சிகா, அனுசா-ஜெயவர்மன், விஜய்-பிரித்தி, மித்துன்-பிரசா, துஷிதா-பாலமுருகன், மபிற்றா- சுகந்தன், பிரவின்ராஜ், கனிஸ்ரன், அரவிந்தன்- கீர்த்திகா, சானுகா, அபிலாஷ், தனுஷ், ஜெதுர்ஸ், கவிசன், கஜலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஷசித், ஷகாஷ், லச்சிதா, மித்திரன், பிரத்துஷா, கேதிஸ், நித்திஸ், ஐசவி, கஷ்ஜவி, தமிரா, மேதகை ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.05.2023 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளிற்காக பூதவுடல் காரைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். (15573)

வீரபத்திரர் கோவிலடி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்.

# இராசிபலன்

21.05.2023
வைகாசி 07, ஞாயிற்றுக்கிழமை
துதியை முன்னிரவு 10.27 மணிவரை
ரோகிணி முற்பகல் 9.26 மணிவரை

சுபநேரம்-8.52-10.22 மணிவரை
இராகுகாலம்-4.22-5.52 மணிவரை

சந்திராஷ்டமம்- சுவாதி

வளவன்


மேஷம்

காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கடகம்

வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், ஊக்கத் தோடும், உற்சாகத் தோடும் செயற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


துலாம்

வரவும் செலவும் சமமாகும் நாள், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறுதடை தாமதம் என்பன ஏற்படலாம்.


மகரம்

வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும்.


ரிஷபம்

கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உடல் நலன் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்,கற்பனை மிகுதியான நாள்.


சிம்மம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், போசன சுகமுண்டு, உறவினர் நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், போசன சுகமுண்டு.


கும்பம்

பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் ஆச்சரியப்பட வைக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


மிதுனம்

சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.


கன்னி

வரவேண்டிய பாக்கிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், மங்கையர் வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.


தனுசு

இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



மீனம்

உறவினர் வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பம் ஏற்படலாம்.

அதிகமாக மகிழ்ச்சியடைய ஆசைப்படக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தி யாழில் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தி யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் பூர்த்தி செய்த நிலையில் தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு கோரிக்கைகளை ஏந்திய பதாகைகளை தாங்கியவாறு போராட்டக்காரர்கள் அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொண்டனர்.

"மலையக மக்கள் சுதந்திரமாக வாழ காணி வழங்கு", "மலையக மக்களை சிதைக்க வேண்டாம்", "பதவிகளுக்கு மலையக மக்களை விற்காதே" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு இந்த போராட்டம் நடைபெற்றது. (4)

# நல்லூர்க் கந்தன் பெருவிழா காளாஞ்சி யாழ்.மாநகரசபையிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இந் நிலையில், நல்லூர் கந்தன் பெருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல், வீதித் தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழி செய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகரசபையினருக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி நேற்று பெருவிழா நாட்காட்டி அடங்கிய காளாஞ்சி ஆலயத்தினரால் கையளிக்கப்பட்டது.

இந்த வைபவத்தின் போது பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகரசபை வளாகத்தில் வாழை, தோரணங்கள் கட்டி அலங்காரம் சிறப்பாக அமையப் பெற்றிருந்தது. (4-33-104)



# இளங்கலைஞர் மன்றத்தில் இணைய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்துடன் இணைந்து கலைப் பணி செய்வதில் ஆர்வம் உள்ள கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


விண்ணப்பப்படிவங்களை சட்டநாதர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தில் பெற்று பூர்த்தி செய்து அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்டும் என மன்றத்தலைவர் அறிவித்துள்ளார். (4)

## சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண். வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்.இதன்போது அபிஷேகம்;மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை நடைபெறும் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (4)



யாழ். புங்குடுதீவு வைத்தியசாலைகளில் விசேட கிளினிக் சிகிச்சை நிகழ்வில் வடமாகாண பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர்,யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி கலந்து கொண்டு விஷேட சிகிச்சையினை ஆரம்பித்து வைத்தார். (படம்- கஜிந்தன்)

# உலக பண்பாட்டு தினத்தை முன்னிட்டு இன்று முப்பெருந்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பெட்டகம் - நிழலுருக் கலைக்கூடம் உலக பண்பாட்டுத் தினத்தினை முன்னிட்டு முப்பெருந்தமிழ் விழாவை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் முப்பெருந் தமிழ் விழா இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் க.சுபாஷினி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர், தி.ஜோன் குயின்ரஸ் ,வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தமிழ மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பொறுப்பாளர்களான முனைவர் மு.இறைவாணி, முனைவர் மு.பாமா உள்ளிட்டோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது கலைகலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் சேவைகள் செய்த பலருக்கும் விருதுகள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இது தொடர்பிலான ஊடக சந்திப்பு யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற போது நிகழ்வு தொடர்பான விடயங்கள் யாழ்ப்பாணப் பெட்டகம் - நிழலுருக் கலைக்கூடம் அமைப்பினரால் தெரிவிக்கப்பட்டது.(4-33)

## சரவணை கர்ணந்தோட்டம்

# சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நாரத்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் இவ்மஹோற்சவத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (4)

# யாழ்.பல்கலையில் இன்று வில்லிசை அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சி. செந்தூரனின் மாணவர் நித்தியானந்தன் மோகனதர்சனின் வில்லிசை அரங்கேற்றம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை முதுநிலை விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் சிறப்பு விருந்தினராக யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் விஎஸ்பி துசிதரனும் கலந்து கொள்வர். நிகழ்வில் சென் ஜோன் ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் வணபிதா ந.ஜே. ஞானப்பொன்ராஜா ஆசியுரையையும் வடக்கு மாகாண கல்வித் திணைக்கள அழகியல் துறைக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா மதிப்பீட்டுரையையும் வழங்குவர்.

அரங்கக் கலைஞர்களாக விற்குரு -நி.மோகனதர்சன், பக்கப்பாட்டு- பே. பிரசன்னா, விற்கடம் - மு. சுலக்சன், ஹார்மோனியம் - த.றொபேட், மிருதங்கம் - சி. செந்தூரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். [illegible]

# வட பகுதியில் கறுவாச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கறுவாச் செய்கையை ஊக்குவிக்கும் முகமான செயலமர்வு ஒன்று நேற்று [illegible] கோவில் சமூக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த செயலமர்வில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ.ஜெயசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வடக்கில் கறுவாச் செய்கையை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாக விளக்க உரை நிகழ்த்தினார்.

அதனைவிட கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் பலரும் இந்த செயலமர்வில் கலந்துகொண்டு, கருத்துத் தெரிவித்ததுடன், பொது மக்களின் கேள்விகள், சந்தேகங்களுக்கு பதிலளித்தனர்.

வடபகுதியில் கறுவாச் செய்கையை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதற்கான செய்முறை விளக்கங்களும் இங்கு வழங்கப்பட்டதுடன், கறுவா கன்றுகளும் இலவசமாகவழங்கப்பட்டன. (4-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 398
Viber 076 636 3378







# கறை படிந்த கடைசி நாள் மே- 18

மே-18 தமிழினம் வலி சுமந்த நாள். அந்த நாளை நாம் ஒவ்வொருவரும் எமது மனங்களில் பதிய வைக்க வேண்டும்.தமிழினத்தின் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட இன அழிப்பின் கொடூரக் கதையை எம் இளம் சந்ததியிடம் கையளிக்க வேண்டியது எம் ஒவ்வொருவருடைய கடமை.

அதற்கு நாம் செய்ய வேண்டியது எது தெரியுமா? தமிழினம் உரிமைக்காகப் போரிட்டதையும் அதன் விளைவு அவ் இனம் எங்கனம் கருவறுக்கப்பட்டது என்பதையும் வரலாறாய் பதிவிட வேண்டும்.

எமது பூர்வீக வரலாறுகளை மாற்றி எழுதும் பேரினவாத சக்திகளின் முன் எம் இனத்தின் வீர வரலாற்றை சுத்திச் சொல்ல வேண்டிய நேரம் இது.

இராமாயணத்தில் இராமன் 14 ஆண்டுகள் வனவாசத்தை முடித்து வந்து நாடு ஆண்டதான வரலாறு போல 2009 இறுதி யுத்தம் நடந்து 14 ஆண்டுகள் கடந்து விட்டன.

இது தமிழ் மக்களின் வனவாசம் நிறைவு பெறும் காலம் நெருங்கிவிட்டதையே சுட்டி நிற்கிறது.

இங்குதான் நாம் ஒன் றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

என்னதான் சர்வதேச விசாரணை,போர்க்குற்ற மீறல் என நாம் பேசிக் கொண்டாலும் இலங்கையின் ஆட்சியாளர்கள் இது பற்றி கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை.

தமிழினத்தின் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட கொடும் தாக்குதல்களை பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொண்ட தாக்குதல் என நியாயம் கூற முற்படுவது அபத்தம்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினம் கொத்துக் கொத்தாய் மடிந்து கொண்டிருக்கும் போது சர்வதேசம் கண்மூடி இருந்ததற்குள் இருக்கும் விடுதலைப் புலிகள் மீதான வெறுப்பையும் நாம் இங்கு புரிந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் போன்ற கட்டமைப்பு மிக்க ஒரு அமைப்பை சர்வதேசம் விரும்பவில்லை என்பதே அதற்குள் இருக்கும் யதார்த்தமான உண்மை.

ஆகாயம், தரை, கடல் என முப்படை கட்டமைப்பையும் கொண்ட ஒரு அமைப்பை வளர விட்டால் அது உலக நாடுகளுக்கே அச்சுறுத்தல் மிக்கதாக அமையும் என சர்வதேசம் கருதியது.

அதற்கு தமிழ் மக்களின் பல்லாயிரம் உயிர்கள் பலிக்கடாய் ஆகிப் போயின. கற்பனைகளில் கூட சிந்தித்துப் பார்க்க முடியாத சம்பவங்களை இன்று வரை மனங்களில் சுமந்தபடி வாழும் தமிழ் மக்களை ஆற்றுப்படுத்த , இலங்கை அரசுகளும் சரி சர்வதேசமும் சரி. இன்றுவரை முனையவில்லை என்பது தான் உண்மை.

இலங்கையில் நடந்த இன அழிப்பின் சாட்சியங்களை; சர்வதேசம் இலங்கை அரசை வெருட்டும் கருவியாய் பாவித்ததே தவிர,அதற்குள் தமிழ் இனத்திற்கு நியாயமான தீர்வை வழங்க வேண்டும் என்றோ அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை பெற்றுத்தர வேண்டுமென்றோ ஒரு கணம் கூட சிந்திக்கவில்லை.

அவ்வாறு சிந்திக்குமாக இருந்தால் அடுத்த கணமே அதைச் செய்து முடித்திருக்கும்.

என்ன செய்வது சொந்த நாட்டிலேயே அந்த நாட்டின் அரசாங்கத்தினால் கொடூரமாகக் கொன்றொழிக்கப்பட்ட இனமாக சிதிலமடைந்து கிடக்கிறது தமிழினம்.

சர்வதேசத்தின் அரசியல் காய் நகர்த்தலில் அமெரிக்க ஆதரவு, எதிர்ப்பு வாதங்களே முன்னிலை பெற்றிருந்தன.

தமிழினத்தின் இன்றைய இந்த நிலைக்கு இந்தியாவும் ஒரு காரணம் என்பதை தமிழினம் முழுமையாக நம்புகிறது.

ஆம் இந்திய பிரதமர் ராஜிவ் காந்தி படுகொலையுடன் தொடர்புடையவர்கள் விடுதலைப்புலிகள் என்றும் அவர்களை அழித்தொழிக்க வேண்டும் என்பதிலும் இந்தியா மிகத் தீவிரம் காட்டியது.

அதைச் சாதகமாகப் பயன்படுத்திய இலங்கை அரசின் கோர தாண்டவத்தை கண்டும் காணாததுமாய் விட்டு, தமிழினத்தின் அழிவுக்கு காரணமாகியது இந்தியா.

ஆயினும் போரின் பின்னரான நிலை இந்திய அரசிற்கு மேலும் தலையிடியை ஏற்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றன.



தனது தேவை முடிந்ததும் இலங்கை அரசு இந்தியாவை கழற்றிவிட்டு விட்டு சீனாவின் பக்கம் சாய்ந்து கொண்டதும் தலைமன்னார் வரை சீனாவை அழைத்து வந்து இந்திய அரசிற்கு பயப்பீதியை ஏற்படுத்தியது இலங்கை அரசு.

ஆக,விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு இந்தியா உதவியதற்கு இலங்கை செய்த கைமாறு தலைமன்னார் வரை சீனாவின் காலடியை பதிய வைத்ததே.

தமிழினத்திற்கு யார் தீங்கு செய்தாலும் தண்டனையை அனுபவிப்பார்கள் என்பது சர்வ நிச்சயம். சர்வதேசத்தின் கண்ணில் இருந்து தமிழினத்தின் மீது கொடூர தாக்குதல் நடத்தியவர்கள் தப்பித்துக் கொள்ளலாம்.

ஆனால் சர்வ வல்லமையுள்ள அந்த பரம்பொருளின் நெற்றிக் கண்ணில் இருந்து யாரும் தப்பிக்க முடியாது.

சர்வதேசத்திற்கு பதில் கூறாதவர்கள் சர்வ வல்லமையுள்ள அந்த சக்தியிடம் பதில் கூறியே ஆக வேண்டும்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் ஓர் இன அழிப்பே நடந்தது என்பதற்கு மே- 18 முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தமிழ் மக்களின் கண்களில் இருந்த பெருகிய கண்ணீரே சாட்சி.

செந்நீரில் குளித்த மண்ணை கண்ணீரால் கழுவிய உறவுகளின் அழுகுரலுக்கு சக்தி உண்டு. அந்த சக்தி தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித்தனங்களுக்கு பதிலாய் அமையும்.

14 ஆண்டுகள் எனும் வனவாசத்தில் இருந்து மீளும் தமிழினத்திற்கு போர்க்குற்ற மீறல்களுக்கான விசாரணையே பட்டாபிஷேகமாக அமையும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க• விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

அது சரி, வடக்கு மாகாணத்திற்கு மீண்டும் சாள்ஸ் அம்மையாரைத்தான் ஆளுநராக நியமித்திருக்கினம். என்ன சங்கதி.

**மூப்பர்:-** தமிழர் ஒருவரை ஆளுநராக நியமிக்க வேணும் எண்டு கேட்டது நாங்கள் தானே.

***சாத்திரியார்:-*** அதெண்டால் உண்மைதான். ஆனால் ஆளுநரை நியமிக்க முன்பாக, எங்களோடும் ஒருக்கால் கதைத்து எங்கட ஆலோசனையையும் கேளுங்கள் எண்டு சொல்றதுக்கு எங்கட அரசியல் தரப்புக்களால முடியாமல் போயிற்றுது.

**பண்டிதர்:-** நீங்கள் சொல்லுறதும் உண்மை தான். ஆனால் இதுக்கு மேலால, வடமாகாணத்தில இப்ப சமயப் பிரச்சினையும் உச்சம் அடைந்திருக்குதல்லோ. அதனால வடக்கு ஆளுநர் நியமனத்தில சில சமய அமைப்புக்களின்ர கை ஓங்கி இருப்பதாகவும் கேள்வி.

**சிறாப்பர்:-** ஓமோம். இப்ப வடக்கு மாகாணத்தில் அரச நிர்வாக மட்டத்தில சமயப் பாகுபாடுகள் நிறைய நடக்கிறதாக அறிய முடியுது.

**மூப்பர்:-** என்ன சிறாப்பர் சொல்லுறியள். சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**சிறாப்பர்:-** வட மாகாணத்தில உள்ள ஒரு மாவட்ட செயல

சுத்தில இருந்த சைவக்கடவுள் படங்கள் அகற்றப்பட்டிருக்குதாம்.

**பண்டிதர்:-** இதென்ன நாசமறுப்பு. கட்டடத் திறப்பு விழாவின் போது பூசை வழிபாடுகள் செய்து சுவாமிப்படங்கள் வைக்கிறது தான் எங்கட மரபு.

அவ்வாறு வைத்த கடவுள் படங்களை அகற்றுகிறது என்பது அபத்தமான வேலையல்லோ.

**சிறாப்பர்:-** பண்டிதர் ஐயா அதுக்கென்ன செய்யிறது. சில சபைகளைச் சார்ந்தவர்களுக்கு சைவக் கடவுள்கள் சாத்தானாகத் தான் தெரியுது. அந்தள

சரியானது தான். இதற்கு அனைவரும் ஆதரவு தெரிவிக்க வேணும்.

தனிய கிறிஸ்தவ சபைகள் மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தில இஸ்லாமிய மதமாற்றம் கண்டபாட்டில நடக்குது.

தினகரன், வீரகேசரி போன்ற கொழும்புப் பத்திரிகைகளில ஒவ்வொருநாளும் மதமாற்றமும் பெயர்மாற்றமும் வந்து கொண்டேயிருக்கின்றன.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பிள்ளைகள் இஸ்லாமியத்திற்கு மதம் மாற்றப்படுகின்றனர்.

பிள்ளைகள் அவலப்படுகினம்.

இருந்தும் இந்த விடயத்தில எங்கட தமிழ் அரசியல் தரப்புகள் கவனம் செலுத்துவதாகத் தெரியல்ல.

**பண்டிதர்:-** ஏன் சாணக்கியன் எம்.பி எல்லாத்துக்கும் ஆ... ஹூ... என்பார். இந்த விடயத்தில் ஏன் அமைதியாக இருக்கிறார்.

**விதானையார்-** சாணக்கியன் எம்.பி தன்ர துள்ளல எல்லாச் சனங்களும் பார்க்கிறதாக இருந்தால் தான் அவர் அட்காசமாகக் கதைப்பார்.



## கட்டாய மதமாற்றத்தைத் தடுக்க சட்டம் கொண்டு வருவது கட்டாயம்

வுக்கு இங்க இருக்கிற சில மதமாற்ற சபைகள் அவையளை மூளைச் சலவை செய்து வைத்திருக்கினம்.

**கங்காணி:-** அதுதானே ஞானசார தேரர் சொல்லுறார். இலங்கையில 379 கிறிஸ்தவ சபைகள் இயங்குது எண்டு.

எனவே கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வரவேணும் எண்டு கேட்டிருக்கிறார்.

**வாத்தியார்:-** கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்தைக் கொண்டுவர வேணும் எண்ட ஞானசார தேரின்ர கோரிக்கை

வறுமையும் தொழில் இன்மையும் அவர்களை இவ்வாறான ஒரு நிலைமைக்கு ஆளாக்கி வருகுது.

இவ்வாறு வாத்தியார் கூற, இடையில் குறுக்கிட்ட விதானையார் விசுவலிங்கம்; வாத்தியார் சொல்றது நூறு வீதம் உண்மை. முஸ்லிம்களின்ர வர்த்தக நிலையங்களில வேலைக்குப் போகிற தமிழ்ப் பிள்ளைகள் இவ்வாறு மதமாற்றப்படுகினம். அதோட முஸ்லிம் ஆண்களுக்கு இரண்டாம், முன்றாம் தாரமாக வாழ்க்கைப்பட்டு, பிள்ளைகள் பெறுகின்ற இயந்திர [illegible]

அதுதவிர, முஸ்லிம்களுக்கு எதிராகக் கதைப்பதை அவர் விரும்புவதும் இல்லை. இதனாலதான் முஸ்லிம்கள், தமிழ்ப் பிள்ளைகளை இஸ்லாமிற்கு மதம் மாற்றுவது பற்றி அவர் இம்மியும் வாய் திறக்காமல் இருக்கிறார்.

**வாத்தியார்:-** என்ன இருந்தாலும் கிழக்கில அதீதமாக நடக்கிற இஸ்லாமிய மத மாற்றத்தைத் தடுத்தே ஆக வேண்டும். அதற்கு கிழக்கிலும் சிவ பூமி, சிவசேனை அமைப்புக்கள் எழுச்சி பெறுகிற தேவை இருக்குது. அதோட கிழக்கு மாகாணத்து தமிழ் மக்கள் மற்றும் சைவ சமய

அமைப்புக்கள் இது தொடர்பில விழிப்பாக இருந்து செயற்பட வேணும். இல்லை எண்டால் கிழக்கில தமிழ் மக்களின்ர நிலைமை மிகவும் மோசமாகிவிடும்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் ஆலடியில் இருந்த அனைவரும் எழுந்து நின்று கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்தை உடனடியாகக் கொண்டு வரவேணும் எண்டு தீர்மானம் நிறைவேற்றி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதிஸ்யக் குலைக்க, விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதனையார்:-** எங்கட தமிழ் மாணவர்கள் இந்தியாவில உயர் கல்வி கற்பதற்கும் பட்டப்படிப்புகளை மேற்கொள்வதற்கும் துறைசார் பயிற்சிகளைப் பெறுவதற்கும் எங்கட இந்தியத் துணைத்தூதரகம் உதவி செய்ய வேணும் எண்டொரு கோரிக்கையை நாங்கள் முன்வைக்க வேணும்.

ஏனெண்டால் எங்கட பிள்ளைகளுக்கு கல்வி கற்பதற்கான போதிய வளங்களும் வசதிகளும் இங்கு இல்லாமல் இருக்குது.

அதைவிட, வெளிநாட்டுப் பல்கலைக் கழகப் படிப்பிற்காக நிறையப் பணத்தைச் செலவிட வேண்டியும் இருக்குது.

ஆகையால, இந்தியாவின்ர புலமைப்பரிசில் உதவித்திட்டத்தின் கீழ், எங்கட மாணவர்களுக்கு இந்தியாவில படிப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேணும். அப்பதான் எங்கட ஏழைப் பிள்ளைகளும் கல்வியில முன்னேற முடியும்.

இவ்வாறு விதானையார் கூறியதும் அதனை ஆலடியில் இருந்த அனைவரும் ஏற்றுக்கொள்ள, அதற்குத் தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குள் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வீட்டுக்கிணற்றில் நன்னீர் இருக்கும் போது போத்தல் தண்ணீரை பருகுப வர்களைப் பற்றி?

**சங்கரசிவம் — வதிரி**

தமிழினத்தின் அடையாளங்களை அழிப்பதில் சரத் வீரசேகர விடாப் பிடியாக நிற்கிறாரே?

தமிழினம் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள். அவர்களுக்கும் இந்த நாட்டில் உரித்துண்டு எனும் உண்மையை ஏன் தான் இவர் போன்ற சிலர் உணரத் தவறுகின்றனரோ?

தமிழினம் என்றாலே பயங்கரவாதம் என்று அவர்கள் மீது வன்மத்தை விதைக்கும் இவர் போன்றவர்களை சிங்கள மக்கள் இன்றுவரை ஆதரித்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே இனவாத சிந்தனைகள் இப்போதும் அவர்கள் மனங்களில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதுதானே பொருள்.

**தேருஷ் — வடமராட்சி**

தமிழினத்துக்கான உரிமை கிடைக்கும் என நம்புகிறீர்களா?

தமிழினத்துக்கான உரிமை மறுப்பு இன்று நேற்று நடந்த ஒன்றல்ல. காலணித்துவ ஆட்சியின் பின் இன்று வரை அது நடந்து கொண்டே இருக்கிறது.

காலம் காலமாக ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் காலம் கடத்துவதை நடத்திக்கொண்டிருந்தனரே தவிர, அவர்களுக்கு தமிழினத்தின் உரிமைகளை வழங்க வேண்டும் என்ற எண்ணம் எள்ளவும் இல்லை.

அதன் விளைவே ஆயுதப்போராட்டம். அதன் விளைவே முள்ளிவாய்க்காலில் தமிழினம் அழிக்கப்பட்டது.

**சுதன் — குப்பிழான்**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சிலருக்கு புண்ணில் புளி கரைத்து ஊத்தியது போல இருக்குமே?

இறந்த சொந்தங்களை நினைவுகூருவதைத் தடுக்க எவருக்கும் உரிமை இல்லை.

முள்ளிவாய்க்காலில் இறந்தது எமது சொந்தங்கள். எம் சொந்தங்களை நினைவேந்துவதற்கு நாம் யாரிடமும் அனுமதிக்காக கையேந்தி நிற்கத் தேவையில்லை.

எம்மை அழித்து விட்டதாய் வெற்றி விழா கொண்டாட அவர்களுக்கு உரிமை உண்டெனில், இறந்த எம் சொந்தங்களை நினைவுகூர எமக்கும் உரிமை உண்டு.

அதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**திகான் — வடமராட்சி**

வீதி விபத்துக்கள் அதிகரித்து விட்டனவே வியாசரே என்ன செய்யலாம்?

விதியா இதுவென்று புரியவில்லை. செய்தித்தாள்களைத் திறந்தால் நாள் ஒன்றிற்கு ஐந்து வீதி விபத்துக்களால் ஏற்பட்ட இறப்பாவது பதிவு செய்யப்பட்டிருக்கும்.

இவற்றிற்கு யார் பொறுப்பு என்று தெரியவில்லை.

வீதி விதிகளை சரியாக பின்பற்றாததன் விளைவுகளும் அதிவேகமுமே மரணங்களுக்கான காரணமாகிறது.

பிறேக் இருக்கிறது என்ற நம்பிக்கையில் அதிவேகமாகச் சென்றால் அது இறப்புக்கான வழியையே ஏற்படுத்தும்.


**தமிழ் — யாழ்ப்பாணம்**

முள்ளிவாய்க்கால் முற்றம் தமிழினத்தின் ஆறாத வடுக்களல்லவோ?

உலகின் எந்தப் பகுதியிலும் மக்கள் அனுபவிக்காத துன்ப துயரத்தை முள்ளிவாய்க்காலில் தமிழினம் பட்டது.

ஆனால் அதை எவரும் ஒரு பொருட்டாகக் கூட எடுக்கவில்லை என்பதுதான் வேதனை.

இலங்கையின் ஆட்சியாளர்களை வெருட்டி அதன் வளங்களைச் சுரண்டுவதற்கு மாத்திரம் சர்வதேச வல்லரசுகள் முனைகின்றனவே தவிர, தமிழினத்துக்கான பிரச்சினையைத் தீர்த்து அவர்களை நிம்மதியாக வாழவைக்க எவரும் முன்வரவில்லை.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சிலருக்கு புண்ணில் புளி கரைத்து ஊத்தியது போல இருக்குமே?

**அகிலன் — கனகராஜன்குளம்**

தமிழ்ப் பிரதேசங்களில் சிறுவர்களைக் கடத்தும் செயல் எப்பேற்பட்டது?

பெற்றோர்கள் முதலில் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது சிறுவர்களுக்கு இவ்வாறான சம்பவங்களைக்கூறி அவர்கள் மனங்களில் பயப்பீதியை ஏற்படுத்தக்கூடாது. மாறாக அவர்களுக்கு தன்னம்பிக்கையையும் துணிவையும் ஊட்டும் விதத்தில் நமது செயற்பாடு இருக்க வேண்டும்.

கடத்தல் பீதியில் இருக்கும் பிள்ளைகள் ஒரு நிலைப்பட்டு கல்வி நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ள முடியும் சொல்லுங்கள்.

**மதுவன் — மீசாலை**

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களால் ஒற்றுமையாய் நின்று தீர்வைப் பெற்றுத் தர முடியுமா வியாசரே?

ஒற்றுமையாக நின்றால் தீர்வைப் பெற வாய்ப்புகள் உண்டு.

என்ன செய்வது இவர்கள் தான் சுயநல அரசியலுக்காக தாமும் பிரிந்து தமிழ் மக்களையும் பிரித்து வைத்திருக்கின்றனரே.

காலம் அவ்வளவு சீக்கிரத்தில் யாரையும் விட்டு வைத்ததில்லை. தமிழினத்திற்கு யார் தீங்கு நினைத்தார்களோ அவர்களுக்கு காலம் தக்க பதிலை வழங்கும்.

அந்தப் பதில் மிகமோசமான தண்டனையாகத்தான் இருக்கும்.

பொறுத்திருந்து பார்ப்போம் யாருக்கு ஜக்பட் அடிக்கப்போகிறது என்பதை.

**ஜெகமோகன் — கொக்குவில்**

வீட்டுக்கிணற்றில் நன்னீர் இருக்கும் போது போத்தல் தண்ணீரை பருகுபவர்களைப் பற்றி?

1990 களில் நாம் சிறுவர்களாக இருந்த போது எமது சிறிய தந்தையார் சவுதி அரேபியாவில் இருந்து வந்திருந்தார்.

சவுதி அரேபியாவில் தண்ணீரை காசு கொடுத்து வாங்க வேண்டும் என அவர் கூறிய போது எமக்கு பெரும் வியப்பு.

அது உண்மையா அல்லது சித்தப்பா புளுகிறாரா என்றெல்லாம் சிந்தித்ததுண்டு.

வெறும் முப்பது வருடங்களில் அதற்கான பதில் எமக்கு கிடைத்தது.

அடுத்த உலகப்போர் நீருக்கானதாய் இருக்கும் என சூழலியலாளர்கள் எச்சரித்திருப்பதை நினைவில் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : இன்றுபோல் என்றும் வாழ்க
பாடியவர் : K.J.யேசுதாஸ்
இசை : M.S.விஸ்வநாதன்
இயற்றியவர்: முத்துலிங்கம்



அன்புக்கு நான் அடிமை
தமிழ் பண்புக்கு நான் அடிமை
அன்புக்கு நான் அடிமை
தமிழ் பண்புக்கு நான் அடிமை...

நல்ல கொள்கைக்கு நான் அடிமை
தொண்டர் கூட்டத்தில் நான் அடிமை
நல்ல கொள்கைக்கு நான் அடிமை
தொண்டர் கூட்டத்தில் நான் அடிமை

அன்புக்கு நான் அடிமை
தமிழ் பண்புக்கு நான் அடிமை

இன்பங்கள் இங்கே பொங்கி வழியும்
முகங்கள் நான் பார்க்கிறேன்
இதயம் எங்கும் பாலைவனம் போல்
இருக்கும் நிலை பார்க்கிறேன்
இன்பங்கள் இங்கே பொங்கி வழியும்

முகங்கள் நான் பார்க்கிறேன்
இதயம் எங்கும் பாலைவனம் போல்
இருக்கும் நிலை பார்க்கிறேன்
அன்பு பணிவு அடக்கம் எங்கே
தேடி பார்த்தேன் தென்படவில்லை

அன்புக்கு நான் அடிமை
தமிழ் பண்புக்கு நான் அடிமை

குடிக்கும் நீரை விலைகள் பேசி
கொடுக்கும் கூட்டம் அங்கே
இருக்கும் காசை தண்ணீர் போலே
இரைக்கும் கூட்டம் இங்கே
குடிக்கும் நீரை விலைகள் பேசி

கொடுக்கும் கூட்டம் அங்கே
இருக்கும் காசை தண்ணீர் போலே
இரைக்கும் கூட்டம் இங்கே
ஆடை பாதி ஆளும் பாதி
அறிவும் பாதி ஆனது இங்கே

அன்புக்கு நான் அடிமை
தமிழ் பண்புக்கு நான் அடிமை

உள்ளத்தில் ஒன்று உதட்டில் ஒன்று
உறவு கொண்டீர்களே
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டை
மறந்து போனீர்களே
நாகரீகம் என்பது எல்லாம்
போதையான பாதை அல்ல

அன்புக்கு நான் அடிமை
தமிழ் பண்புக்கு நான் அடிமை
நல்ல கொள்கைக்கு நான் அடிமை
தொண்டர் கூட்டத்தில் நான் அடிமை
அன்புக்கு நான் அடிமை
தமிழ் பண்புக்கு நான் அடிமை

# "யாதும் ஊரே யாவரும் கேளீர்"

## ஈழத்து இளைஞனாய் விஜய்சேதுபதி

**உலக அகதிகளின் வலி, அவர்களின் பரிதாப நிலை, அவர்களுக்கான விடுதலையை, அவர்களின் திறமை, அங்கீகாரம் உள்ளிட்டவற்றை ஓர் ஈழத்தமிழ் அகதியின் வாழ்க்கை வழியாகப் பேசுகிறது "யாதும் ஊரே யாவரும் கேளீர்" திரைப்படம்.**

கொடைக்கானலில் இசைக்குழு ஒன்றை நடத்தி வருகிறார் மெத்தில்டா (மேகா ஆகாஷ்). அவரின் ஊருக்குப் புகழ் பெற்ற இசைக்கலைஞர் ஜெஸ்ஸி (தபியா மதுரா) விருந்தினராக வர, அவரை வரவேற்கிறார் அந்த ஊரின் சர்ச் ஃபாதர் சேவியர் (விவேக்). ஜெஸ்ஸியின் காரில் அவருடனே வந்து இறங்குகிறார் இசைக்கலைஞர் புனிதன் (விஜய்சேதுபதி). புனிதன் லோக்கல் ஊர்க்காரர் என்று ஜெஸ்ஸியும் ஜெஸ்ஸியுடன் வந்த லண்டன்காரர் என ஃபாதர், மெத்தில்டா உள்ளிட்டவர்களும் மாறிமாறி நினைத்துக் கொள்கின்றனர். ஒரு கட்டத்தில் புனிதன், "கிருபாநிதி" என்ற பெயரில் குடியுரிமை கேட்டு வந்திருக்கும் ஈழ அகதி என்பது தெரிய வருகிறது.

நாடற்றவன் என்ற வலி, போர் தந்த ஆறாத வடு, வாழ்க்கைப் பாடம் தந்த நிதானம், இசையுலகில் சாதிக்க வேண்டும் என்ற பெருங்கனவு, வாழ்வை அழகாக்கும் காதல் என வாழப் போராடும் கனமான கதாபாத்திரத்தை ஏற்றுள்ளார் விஜய் சேதுபதி. ஆனால், அதில் "விஜய்சேதுபதி"யாகவே வந்து ஜஸ்ட் பாஸ் மட்டுமே வாங்கியுள்ளார். ஈழத்தமிழ் உச்சரிப்பிலும் உணர்ச்சிகரமான காட்சிகளிலும் இன்னும் "ஹோம் ஒர்க்" செய்திருக்கலாம்.

தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் அம்மக்கள் இரக்கமின்றி நடத்தப்படுவது, ஒரு மனிதனுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு விடுதலைக்காக ஏங்குவது, அகதி அடையாள அட்டைகளை வாங்கப் பல இன்னல்களைச் சந்திப்பது எனப் பேச வேண்டிய பல அரசியல் சிக்கல்களைப் படம் முன்வைக்கிறது. அகதிகளின் வாழ்க்கை முழுவதும் பின்தொடரும் "கியூ"பிரான்ச் போன்ற விசாரணை அமைப்புகளால் ஏற்படும் தொந்தரவுகள், இந்திய அரசியலமைப்பு, அகதிகளை எவ்வாறு அணுகுகிறது என்ற நிதர்சனம் என இதுவரையில் தமிழ் சினிமாவில் காட்டப்படாத விஷயங்களையும் காட்டியிருக்கிறது இத்திரைப்படம்.

முக்கியமாக, அகதிகள் முகாமில் தங்கி கல்வி கற்கும் மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பு படிப்பதற்கான வாய்ப்பு சட்ட ரீதியாகவே மறுக்கப்படும் தகவலையும் பேசியிருக்கிறது.



ஆனால், மேற்சொன்னவற்றில் பலவற்றை வெறும் தகவலாக மட்டுமே கடத்தி, ஒரு படமாக முழுமையடையாமல் போயிருப்பது அந்த அரசியல் உரையாடல்களின் வீரியத்தைக் குறைத்திருக்கிறது.

மொத்தப் படமும் புனிதன் என்கிற அகதியின் வழியாகவே பயணிக்கிறது. ஆதரவற்றவரான புனிதனை இலங்கையிலுள்ள ஒரு பாதிரியார் வளர்த்து, லண்டன் இசைப் பள்ளியில் சேர்க்க முயற்சி செய்கிறார். பின் இலங்கை இராணுவத்தில் மாட்டுவது, சிறைத் தண்டனை, அங்கிருந்து தப்பித்தல், வேறொரு மாநிலத்தில் வாழ்க்கை என முற்றிலும் ஆழமான, அழுத்தமான பகுதியைக் கொண்டுள்ளது அந்தக் கதாபாத்திரம்.

இலங்கை தேவாலய ஃபாதர் கிருபாநிதியின் அக்கா புனிதனுக்கு உதவும் இலங்கைத் தமிழர் என ஆங்காங்கே வரும் சில கதாபாத்திரங்களும் அதன் கதைகளும் கொஞ்சம் ஆறுதல் தருகின்றன. திரைக்கதையைச் சிறப்பாகச் செப்பனிட்டிருந்தால், தனக்கான அடையாளத்தைத் தரக் கோரி கனிகாவிடம் விஜய் சேதுபதி மன்றாடும் இடம் கண்ணீரையும் அகதிகளுக்கான விடுதலை குறித்து உலக மேடையில் பேசும் இறுதிக் காட்சி கைத்தட்டலையும் பார்வையாளர்களிடமிருந்து பெற்றிருக்கும். ஆனால், அப்படி நடக்காததால் படம் ஒரு மேம்போக்கான அனுபவமாக மட்டுமே முடிந்து போகிறது.

இலங்கையில் நடக்கும் பின்கதை காட்சிகளில் ஒளிப்பதிவாளர் வெற்றிவேல் மகேந்திரன் கவனம் பெறுகிறார். அரசியல் ரீதியில் ஒலிக்கும் கூர்மையான வசனங்களும் ஒரு அகதியின் கண்ணீரைப் பேசும் வசனங்களும் படம் முழுவதுமே விரவிக் கிடக்கின்றன. ஆனால், அவை நேர்த்தியான திரைக்கதையில் பொருத்தப்பட்டிருந்தால், கைத்தட்டலோடு சமூகத்தின் பேசுபொருளாகவும் இப்படம் மாறியிருக்கும். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" அரசியல் மட்டுமே பேசுகிறது. ஆனால் படமாக ஈர்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளியோபட்ரா கறுப்பா? சிவப்பா?

இறந்து 2,000 ஆண்டுகளுக்குப் பிறகு, கிளியோபட்ராவின் நிறம் குறித்த கொந்தளிப்பு எகிப்து நாட்டில் எழுந்திருக்கிறது. காரணம், நெட்ப்ளிக்ஸில் வெளியான 'Queen Cleopatra" டாக்கு டிராமா. நான்கு பாகங்களாக நெட்ப்ளிக்ஸ் உருவாக்கியிருக்கும் இதன் முதல் பாகம் மே 10 அன்று வெளியானது. இதில், பிரிட்டிஷ் கறுப்பின நடிகையான அடேல் ஜேம்ஸ், கிளியோபட்ராவாக நடித்திருப்பதுதான் சர்ச்சைகளுக்குக் காரணம்.


எகிப்து நாட்டின் சுற்றுலா மற்றும் பழங்காலப் பொருட்கள் அமைச்சகம், 'கிளியோபட்ரா கிரேக்கப் பெண் தோற்றத்தில்தான் இருந்தார். அவருக்கு வெள்ளை நிற சருமம்தான். அவரைக் கறுப்பினத்தவராகச் சித்தரிப்பது சரியல்ல" என்று கண்டித்துள்ளது. எகிப்தின் முதிய தொல்லியல் ஆய்வாளர் ஜாஹி ஹவாஸ், 'கிளியோபட்ரா அலெக்ஸாண்ட்ரியாவில் பிறந்தவர். கிரேக்கத்தின் மாசிடோனியப் பரம்பரையில் வந்தவர். ஆபிரிக்கப் பெண் தோற்றத்தில் அவர் இல்லை" என்று மறுத்திருக்கிறார். மஹ்மூத் அல் செமாரி என்ற வழக்கறிஞர், நெட்ப்ளிக்ஸ் மீது வழக்கு போடப்போவதாக அறிவித்திருக்கிறார். எகிப்தின் al-Wathaeqya என்ற சேனல், 'எங்கள் மகாராணி கிளியோபட்ராவின் வரலாற்றை உண்மைத் தன்மையுடன் நாங்களே டாக்குமெண்டரியாக எடுத்து உலகின் பல மொழிகளில் வெளியிடப் போகிறோம்" என்று கூறியுள்ளது.

கிளியோபட்ராவின் நிறம் குறித்த சர்ச்சை எழுவது இது முதல் முறையல்ல! பேரழகியாக அறியப்படும் கிளியோபட்ரா குறித்த வரலாற்றை விட கற்பனைப் புனைவுகளே உலகெங்கும் பரவியிருக்கின்றன. அதனாலேயே, வரலாற்றில் அதிகம் ஆராய்ச்சிக்குள்ளான அரசியாக அவர் இருக்கிறார். அலெக்ஸாண்டரின் படையெடுப்பில் எகிப்து வீழ்ந்த போது, அதன் நிர்வாகியாக தாலமி என்பவரை நியமித்தார் அலெக்ஸாண்டர். கிட்டத்தட்ட 300 ஆண்டுகள் அந்த தாலமி வம்சம் எகிப்தை ஆண்டது. அந்த வம்சத்தில் வந்து ஏழாம் கிளியோபட்ரா என்ற பெயருடன் கி.மு 51 ஆம் ஆண்டில் அரியணை ஏறியவர் இவர். மருத்துவம், தத்துவம் படித்தவர், சிறந்த விவாதத்திறன் பெற்றவர், போர்க்கலை அறிந்தவர், பல மொழிகள் பேசியவர் என்றெல்லாம் கிளியோபட்ரா குறித்த உண்மைகள் பலருக்குத் தெரியாது. அவரின் மயக்கும் அழகே எல்லாவற்றையும் தாண்டி முன்னிலை பெற்றது.

ஆட்சியைப் பிடித்தது முதல் அவருக்கும் அவர் சகோதரனுக்கும் சண்டை. இது உள்நாட்டுப் போராக மாறியது. பக்கத்திலேயே இருந்த உரோமப் பேரரசு எகிப்தை விழுங்கப் பார்த்த நேரம் அது. உரோமை ஆண்ட ஜூலியஸ் சீஸரின் உதவியுடன் சகோதரனை வீழ்த்திய கிளியோபட்ரா, பிறகு சீஸரின் அந்தரங்கத் தோழியாக மாறி ஒரு குழந்தையும் பெற்றார். சீஸர் கொல்லப்பட்ட பிறகு அதிகாரத்துக்கு வந்த மார்க் ஆண்டனியின் தோழியாகவும் மாறினார். உரோம் குடியரசின் படைகளால் வீழ்த்தப்பட்டு மார்க் ஆண்டனி தற்கொலை செய்து கொண்ட போது, கிளியோபட்ராவும் விஷம் குடித்து இறந்தார். கி.மு 30 ஆம் ஆண்டு தன் 39 வயதில் கிளியோபட்ரா இறந்தபோது, எகிப்து தனி அரசு என்ற அடையாளத்தை இழந்து உரோமப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. மாபெரும் உரோமப் பேரரசை சமாளித்து எகிப்தின் சுயாட்சியைக் காப்பாற்றிய கடைசி அரசி என்ற வகையில் எகிப்து மக்களுக்குக் கிளியோபட்ரா மீது பெரும் மரியாதை உண்டு. அதனால்தான் அவரை அவமதித்தால் கோபப்படுகிறார்கள்.

"கிளியோபாட்ரா வாழ்ந்த காலத்திலேயே செய்த அவரது சிலை இப்போதும் ஜேர்மனியில் இருக்கிறது. கிரேக்கப் பெண் போலவே அதில் இருக்கிறார். அவரின் ஏராளமான ஓவியங்கள் உண்டு. ஒன்றும் அவரை இப்படிக் காட்டவில்லை. கற்பனைக் கதை என்றால் அவர்கள் இஷ்டத்துக்கு எடுக்கலாம். டாக்கு டிராமா எனும் போது உண்மைக்கு நெருக்கமாக இருக்க வேண்டும் அல்லவா?" என்று கொதிக்கிறார்கள் எகிப்தின் வரலாற்று ஆய்வாளர்கள்.

ஆபிரிக்கக் கண்டத்தில் இருந்தாலும், ஆசிய மற்றும் ஐரோப்பியப் பண்பாடுகளின் கலவையாகவும் நிறக்கலவையாகவும் இருக்கும் நாடு எகிப்து.



அந்த நாட்டுக்கு மேற்கத்தேய உலகம் கறுப்பு அடையாளம் தருவதற்குப் பின்னால் அரசியல் சூழ்ச்சி இருப்பதாக எகிப்து மக்கள் கருதுகிறார்கள். கிளியோபட்ரா டாக்கு டிராமாவுக்கு எதிர்ப்பு வருவதற்கு நிஜமான காரணம் இதுதான்.




இந்த சீசனில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் 'இம்பேக்ட் பிளேயர்' விதியை கொஞ்சம் வித்தியாசமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டு வருகிறது மும்பை இந்தியன்ஸ் அணி. தொடர்ந்து சொதப்பிவரும் கப்டன் ரோஹித் சர்மாவை ஃபீல்டிங்கின் போது மட்டும் இம்பேக்ட் பிளேயராகக் களமிறக்கப் போகிறார்களாம். ஆனால், ஏற்கெனவே கடைசி ஐந்து ஓவர்களில் மும்பை பௌலர்கள் ரன்களை வாரி வழங்கிக் கொண்டிருப்பதால் கூடுதல் பௌலர் இல்லாமல் ரோஹித்தை வைத்து ஆடுவது சரியில்லை என இதற்கு சமூக வலைத்தளங்களில் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்து வருகின்றனர் மும்பை ரசிகர்கள்.

வீரர்களைவிட பயிற்சியாளர்கள் அதிகம் இருந்தும் இந்த முறை கடைசி இடம் கிட்டத்தட்ட டெல்லி கேப்பிடல்ஸ் அணிக்கு உறுதி. இதனால் அதிருப்தியில் இருக்கும் ரசிகர்களை உற்சாகப்படுத்த ஐ.பி.எல்லுக்குப் பிறகு சிறப்புப் போட்டி ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருக்கிறது டெல்லி கேபிட்டல்ஸ் நிர்வாகம். இதில் பயிற்சியாளர்கள் மற்றும் பிற அணி நிர்வாகிகள் ஒரு அணியிலும் வீரர்கள் ஒரு அணியிலும் ஆடுவார்களாம். பயிற்சியாளர்கள் அணியின் கப்டன் கங்குலியா, பாண்டிங்கா என்பது மட்டும் சஸ்பென்ஸ் என்கிறார்கள்.

இன்ஸ்டாவில் விராட் கோலி, நவீன் உல் ஹக் மோதல் உச்சம் தொட்டிருக்கிறது. "உண்மை ஒரு நாள் வெல்லும்" எனத் தமிழ்ப்பாட்டை கோலி ஸ்டோரியாக வைத்து நெகிழ, "போடா போடா புண்ணாக்கு" பாடலை ரசிப்பது போன்று நவீன் ஸ்டோரி

# I.P.L சாரல்...

வைத்திருக்கிறார். இதை கவுதம் கம்பீர் ஷேர் செய்திருக்கிறார். அடுத்ததாக இவர்கள் என்னென்ன ஸ்டோரி வைக்கப் போகிறார்கள் என்பதைப் பார்க்க ஆர்வமாகக் காத்திருக்கின்றனர் ரசிகர்கள்.

அடுத்த முறை ஐ.பி.எல் ஒளிபரப்பு உரிமத்தை எவ்வளவு விலை கொடுத்தாலும் வாங்கி விட வேண்டும் என்று தீர்மானமாக இருக்கிறதாம் சன் குழுமம். சன்ரைஸர்ஸ் அணி தோற்றாலும் சரி, ஜெயித்தாலும் சரி, உரிமையாளர் காவ்யா மாறனை கமராக்கள் போகஸ் செய்வது மட்டும் மாறுவதில்லையாம். இதனால் செம கடுப்பில் இருக்கும் காவ்யா இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கின்றன நெருங்கிய வட்டாரங்கள்.

யுவராஜ் சிங் முதல் "சுட்டிக்குழந்தை" சாம் கரண் வரை இதுவரை 15 கப்டன்கள் பஞ்சாப் அணியை தலைமை தாங்கியிருக்கிறார்கள். இப்படி கப்டன்கள், வீரர்கள் என யார் மாறினாலும் எந்தப் பயனும் இல்லை என்பதால் மீண்டும் பெயரை மாற்றத் திட்டமிட்டிருக்கிறார்கள். இதில் "பஞ்சாப் சூப்பர் கிங்ஸ்" என்ற பெயரும் பரிசீலனையில் உள்ளதாம். ஏற்கெனவே "கிங்ஸ் லெவன் பஞ்சாப்" என இருந்த பெயரை இரண்டு சீசன்களுக்கு முன்புதான் "பஞ்சாப் கிங்ஸ்" என மாற்றியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பிரதிநிதிகள் பதவி துறந்தால்...

ஆளும் கட்சி செய்யும் சூழ்ச்சியால்
ஆட்டங் காணும் வகையில்
வாழும் மக்கள் தேர்தல் வந்தால்
நல்ல பாடம் புகட்டுவர்

மொழியும் மதமும் நிலமும் அழித்து
இழிவாக அரசு செயற்பட்டால்
பழியும் பாவமும் பெற்று நாமும்
அழிவைச் சந்தித்து மௌனிப்பதோ?

தமிழரப் பிரதிநிதிகள் இன்று
ஏமாந்து நிற்கும் நிலையில்
தம்து பதவியைத் துறந்து
வெற்றியைப் பெற மாட்டாரோ...

தமிழர் சார்புக் கட்சி வடகிழக்கில்
தனிப் பெரும் செல்வாக்கினாலே
தமது மக்கள் மீண்டும் தெரிவு செய்திட
பதவியைத் துறப்பீர் விரைந்து...

எஸ். சிவானந்தராஜா, பண்டத்தரிப்பு.

# கஞ்சா தரும் நண்பனே!



பொதி பொதியாய் கடலில் மிதக்குதாம்
பொல்லாத படைகளையும் புரட்டி எடுக்குதாம்
கண்ணில் தெரியாமல் கரைக்கு வருகுதாம்
கஞ்சா வியாபாரம் தினமும் நடக்குதாம்

இன்னல் பல கண்ட எம்மினத்தின்
இளையோர் கையில் பக்குவமாய் - இந்த
நஞ்சைக் கொடுக்கும் மாபெரும் திட்டம்
பஞ்சம் இன்றியே பரந்து நடக்குதாம்

வழிப்பறிக் கொள்ளை கழுத்தறுப்பு
வீதியில் மோதல் அதிகரிப்பு
குழந்தைகள் பெண்கள் உயிர்க்குடிப்பு
குடிமக்கள் தினமும் பரிதவிப்பு

இத்தனைக்கும் சான்று கஞ்சாவே- இது
சத்தமின்றி எம்மைக் கொல்ல அஞ்சாதே
அழகான பெயரோடு உருமாறி-இனத்தின்
ஆணிவேர் அகற்றிட துடிக்கிறதே

ஐயகோ எமக்கிது சாபமன்றோ-இனி
எம்மினம் காத்திட யாருமுண்டோ
படகேறிச் செல்லும் நண்பனே
பணிகின்றோமையா உம்பாதம் தொழுகின்றோம்
உத்தமராய் நீங்கள் உறுதியோ டிருந்தாலே
இத்தனைக்கும் தீர்வு விரைவினில் கிடைத்திடும்

சாந்தையூர் வினிஸ், பண்டத்தரிப்பு.

# காலத்தின் பெருநெருப்பு

வெடித்த பாதப் பிளவுகளின் உள்ளே
உறுத்தும் குறுமணல்களாய்
நெருடும் நினைவுகளுடன்
கடக்கும் காலத்தை
கடந்திட பிரயத்தனப்படுபவள்

மனதில் விரியும் பாலையில்
செடியொன்றை வளர்த்து
நிழல் தேடுகின்றாள்

ஏதோவொன்றை
தக்கவைத்துக் கொள்வதற்காகவே
தொடரும்
அன்றாடத்தின் போராட்டம்
பாலையின் செடிக்கும்
விடையில்லா கேள்விகளுக்கும்

துளிர்த்தலை மறந்த
செடிகள் முட்களைப் பூக்க
நிழல்கள் முற்றாக
மறைந்த பின்புதான்

நிலைத்தலை நிலைநாட்ட
நிலைத்து நிமிர்கின்றது
நான்
அவளுக்குள் அதன் உயிர்ப்பு
காலத்தின் பெரு நெருப்பு

சங்கரி சிவகணேசன்.



# மௌனத்தின் தேடல்- 669



# மே 18 ஆம் நாள்

ஆண்டுகள் பதினான்காயினும்
அல்லோல கல்லோலமாய்
அந்தரித்து மரணித்தோர்களான
அன்பு-பாச உறவுகளை எண்ணியே
ஆறாத-தீராத கவலையுடன்
முள்ளிவாய்க்கால் முற்றத்திலே
சுடரொளி ஏற்றி-ஏந்தியுமே
நினைத்துருகிடும் நாளிது!

தங்கத்தமிழன், காரைநகர்.

# மௌனத்தின் தேடல்- 670



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# நடைபிணமாய் வாடுகிறேன்.

சொல்லாமல் யாரும் இல்லை
தேடாத ஊரும் இல்லை
தள்ளாத வயதில் எனக்கு
சோறு போட யாரும் இல்லை
நாளாகத் தேடுகிறேன்
நடைப்பிணமாய் வாடுகிறேன்
என் வயிற்றில் பிறந்தவனே
நான் சாகும் நேரத்திலே
பால் வார்க்க வருவாயா?
பேயாளும் நாட்டினிலே
நாம் வாழ முடியாதப்பா
மறுபிறவி உண்டென்றால்
என் வயிற்றில் வந்துவிடு

லக்ஸ்மி, ஆனைப்பந்தி.

# தேடல்கள்

தேடல்கள் உள்ளவரை
அறிவியல் வளரும்
தமிழ் இனம் உள்ளவரை
தேடல்கள் வளரும்

திருமதி. ஜெ.விஜயநிர்மலா,
சங்கத்தானை.

# கருவறையின் வலி

பத்துத் திங்கள் உன்னைக் கருவறையில் சுமந்து
பக்குவமாய்ப் பத்தியமும் காத்து
சீராட்டித் தாலாட்டி ஆசையாய் வளர்த்து
சிரிப்பொலியில் அகமும் மகிழ்ந்து
பள்ளி செல்லும் வயதில் பாடமும் கற்று
பல்கலையும் கற்றுப் பட்டம் பெறுவாய் என்றிருக்க
பாதகனின் கையில் அகப்பட்டு
பாதி வயதில் நீயும் காணாமல் போய்விட்டாய் மகனே!
புகைப்படப் பிரதியை வைத்துப் புலம்பித் திரியும்
கருவறையின் வலியை யார் அறிவார்?

ஆ. செல்வி, திருநாவலூர்.

# உறங்காத உறவுகள்

வழி மீது விழி வைத்து
விழிநீர் சொரிந்து வீதி ஓரம்
ஓயாத அலையாக கரை மீது நுரையாகி
உறவுகளைத் தேடித்தேடி களைத்து
பத்து மாதம் கருவில் சுமந்தவனை
பதினைந்து ஆண்டுகள் மனதில் சுமந்து
அனுதினம் போராடி உடல் மெலிந்து ஊனமாகி
உயிர் ஊசல் ஆட உறவுகள் தேடி போராட்டம்
விடுதலையை எண்ணி விடுகதையாய் வாழ்வு

கும்பவாழியான்,

# நீதி கிடைக்குமா?

எங்களுக்கு நீதி கிடைத்தால்
இந்நாடு சுபீட்சம் பெறும்
நீதி இல்லா அரக்க
[illegible]

பி.மதுஷ்சன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இன்று முப்பெருந்தமிழ் விழா!

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணப் பெட்டகம் நிழலுருக் கலைக்கூடத்தால் உலக பண்பாட்டுத் தினத்தை முன்னிட்டு முப்பெருந்தமிழ்விழா நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் முப்பெருந்தமிழ்விழா இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், தமிழ் மரபு அறக்கட்டளை சர்வதேச அமைப்பின் தலைவர் முனைவர் க.சுபாஷினி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். சிறப்பு அதிதிகளாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா, தமிழ்மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பொறுப்பாளர்களான முனைவர் மு.இறைவாணி, முனைவர் மு.பாமா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ச-20)

## கார் விற்பனைக்கு

டைகச்சு கார் விற்பனைக்கு உண்டு (ஜப்பான்) டச்சு றோட் உடுவில்.

தொடர்பு:078 3835 354, 075 041 7119

டீசல் : 64-xxxx

(CS 24919) A-1

## பணிப்பெண் தேவை

வீட்டில் வந்து சமையல் வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. (வயது:45-60) சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 045 6898 / 077 480 1265

## காணியுடன் வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி வளாக வீதியில் 3/4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு.

தொடர்பு: 076 739 2518

## வேலையாள் தேவை

யாழ். வணிகர் கழகத்துக்கு அலுவலக உதவியாளர் (Peon) தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

யாழ் வணிகர் கழகம்,
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
jaffnachamberofcommerce@gmail.com
021 222 2367 / 076 575 4993

(CS 49881) AH-1

## விற்பனைக்கு

வீடு கட்ட உகந்த அரிகற்கள் விற்பனைக்கு. ஒரு கல் - 128 /=

தொடர்புக்கு: 077 6070 685

(CS 24922) A-1

## தேவை

MS Office, கணக்கியல் தெரிந்தவர்கள். கூலியாட்கள் தேவை.

தொடர்புக்கு: 077 77 222 15

(CS 24935) A-1

## வாடகைக்கு

யாழ். நகரில் வீடுகள், களஞ்சிய சாலைகள் மற்றும் கடைசல் வாடகைக்கு உண்டு

077 345 0039
077 348 0039

(CS 24926) A-1

## வீடு வாடகைக்கு

யாழ்.நகரில் சகல தளபாட / சமையல் அறை வசதிகளும் கொண்ட வீடு நாள் / கிழமை / மாத வாடகைக்கு உண்டு.

074 374 3767

(CS 50305) AH-1

## வீடு விற்பனைக்கு

காளி கோவிலடி, கோண்டாவில் மேற்கில் 02 பரப்புக் காணியில் அமைந்துள்ள 03 அறை, குசினி, கோல் விஸ்தீரணம் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

077 072 9638

(CS 24850) N-1

## ஷட்டர் Shuttering

யாழ்ப்பாணத்திற்கு
(பொருட்கள் வைத்திருப்பவர்களுக்கு)

**மாதம் 8 லட்சம்**

**நீங்கள் ஒவ்வொரு மாதமும் சம்பாதிக்கலாம்**

ஷட்டர் பொருட்கள், இலவச போக்குவரத்து வசதி உள்ளவர்கள் அவற்றை வீடு மற்றும் பணியிடங்களுக்கு கொண்டு வருவதற்கு இந்த வாய்ப்பு. ஆண்டுக்கு 100 லட்சம் சம்பாதிக்கலாம். 5 ஆண்டுகளுக்கு 500 லட்சம் (5 கோடி) சம்பாதிக்கவும். இப்போது வேலை தேடி அலையும் காலத்தை முடித்துவிட்டு நிரந்தர பணியில் சேர்ந்திருக்கிறீர்கள். தொடர்ச்சியான ஒப்பந்தங்களைப் பெறுவதன் மூலம் வேகமாக கோடீஸ்வரராகுங்கள்

**Call 071 593 3299**

**Vajira House**

1916 ம் ஆண்டு தொடக்கம், 107 வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையினர்

**வஜிர ஹவுஸ்**

23, டீல் பிளேஸ் A, கொள்ளுபிடி

Share இம் மதிப்புமிக்க செய்தியை உங்கள் வெளிநாட்டு நண்பர்கள் மற்றும் உறவுகளுக்கு மூலம் பகிரவும்

**இலங்கையில் எங்கு வேண்டுமானாலும் வஜிர வீட்டைக் கட்டியமைக்கலாம்.**

(வாழ்நாள் உத்தரவாதத்துடன்)

→யாழ்ப்பாணம் →வவுனியா →கண்டி
→மன்னார் →கொழும்பு →முல்லைத்தீவு

139 இலட்சம் - 40 இலட்சம் (Big) Discount = House Value 99 இலட்சம்

Pay Rs. 10,000 to start work

BUILD A VAJIRA HOUSE



To view VIDEO of this house

YouTube → Vajira House

Pay Rs. 10,000 to start work

24 hrs 0719 228 888



இன்றே அழையுங்கள் Ms.Sanjeevkumar

1916 ம் ஆண்டு தொடக்கம், 107 வருட 4 தலைமுறையாக பிரித்தானிய ஆட்சிக்கால வரலாறு உடைய

**வஜிர ஹவுஸ்**

23, டீல் பிளேஸ் A, கொள்ளுபிடி

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Mitsubishi Lancer கார் 12SRIxxxx (Box Model) விற்பனைக்கு உண்டு. சிலிண்டர் கொள்ளளவு-1410 CC மற்றும் 05 Gear கள் போடமுடியும். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 045 6898

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு

**காவலாளி**

ஒருவர் தேவை.
40 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.

070 714 8691

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 26.12.1942 — இறப்பு 19.05.2023

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாச செயலாளர் கோ.கௌரிதாசன் அவர்களின் அன்புத் தாயார்

**கோபாலபிள்ளை பரமேஸ்வரி**

அவர்கள் காலமான செய்தியறிந்து துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மறவன்புலோ திருமகள் மாதர் சி.க.கூ.சங்கம்.**

(CR 39884) A-1

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதி, தாவடி வடக்கில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 255 0807

## காணி விற்பனைக்குண்டு

கொக்குவிலில் பொற்பதியில் 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 660 4418
076 208 6914

## காணி விற்பனைக்கு

ஓட்டுமடம் செழியன் வீதிப் பகுதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதி பகுதி பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

077 9041 175, 070 4566 972

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, மின்சார சபைக்கு சில மீட்டர் தூரத்தில் வீதியோரத்தில் 3/4 பரப்புக் காணி கட்டடம் கட்டுவதற்கு ஏற்ற நீள அகலத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு:

077 472 6778, 075 318 5509

(CS 24934) A-1

## இத்தாலி விசா

இத்தாலி செல்ல விரும்புபவர்களுக்கு அரிய வாய்ப்பு. அங்கு சென்ற பிறகே பணம் செலுத்த வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

Mr. Tharanga
072 269 6417

(CS/9330) AH-1

## நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் - 2023

பரிவார மூர்த்தி வைரவப் பெருமான் மகா கும்பாபிஷேகம்

**மகா கும்பாபிஷேகம்:-**

**22.05.2023** திங்கள் கிரியை ஆரம்பம்
**23.05.2023** செவ்வாய் எண்ணெய்க்காப்பு
**24.05.2023** புதன் அதிகாலை 5.56 மணிமுதல் 7.18 மணிவரை மகா கும்பாபிஷேகம்.

**கொடியேற்றம்** 24.05.2023 புதன் முற்பகல் 11.30 மணி
**தேர்த்திருவிழா** 02.06.2023 வெள்ளி முற்பகல் 10.00 மணி
**தீர்த்தத்திருவிழா** 03.06.2023 சனி முற்பகல் 10.30 மணி

மகோற்சவ காலத்தில் தினமும் இரவு 7.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை "கந்தன் புகழ்பாடும் பாமாலை" எனும் தொனிப்பொருள் பற்றி தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**
**இராஜகோபுர திருப்பணிச்சபை**

(CS 24931) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

349

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## அநாவசியமான கட்டுப்பாடுகள்

**வா**ழ்க்கையில் விதிக்கப்படும் அநாவசியமான கட்டுப்பாடுகள் மனிதனின் உடல்,உள, சமூக நன்னிலையாகிய உண்மையான சுகாதார நிலையை பாதிக்கும் என ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

சுவையாக உண்பதும் வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாது. சுவையான உணவு வகைகளை யாரும் தியாகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. உப்பு, உறைப்பு, புளிப்பு, இனிப்பு போன்ற அனைத்து சுவைகளும் ஆபத்தானவை என எண்ணிக் கொள்கிறோம். ஐஸ் கிறீம், பாயாசம் போன்றவற்றை உண்ணும் பொழுது குற்ற உணர்வுக்கு ஆளாகின்றோம். உப்பு உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. உப்பின் அளவு உடலில் குறைந்து விட்டால் அது பல தீய விளைவுகளுக்கு வழிவகுக்கும். வெப்ப வலய நாடுகளில் வசிக்கும் மக்களுக்கு ஒப்பீட்டளவில் அதிகளவு உப்பு தேவைப்படுகிறது. காரணம் வியர்வையின் மூலம் பெருமளவு உப்பு இழக்கப்படுதலாகும்.

எனவே உயர் குருதியமுக்கம் உள்ளவர்கள் கூட போதியளவு உப்பை தினந்தோறும் உள்ளெடுப்பது நல்லது. உப்பின் முக்கியத்துவம் அறிந்தே எம் முன்னோர் "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே, உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பது போன்ற பல உப்பை பற்றிய விடயங்களை கூறி வைத்திருக்கிறார்கள். எனவே போதியளவு உப்பு சேர்த்து கறி சமைக்க பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் அளவுக்கு அதிகமான உப்பை உணவிலே சேர்த்துக் கொள்வதை தவிர்ப்பது நல்லது. இதேபோன்று உணவிலே உறைப்பு, புளிப்பு சுவைகளைச் சேர்ப்பதனால் தீய விளைவுகள் எதுவும் ஏற்பட்டு விடப் போவதில்லை.

இவை உணவின் சுவையை மெருகேற்றும் என்பதுடன் சமிபாட்டிற்கும் உறுதுணையாக இருக்கும். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்ற விடயத்தை மறந்து விடலாகாது.

பால், முட்டை போன்றவற்றை போதியளவிலே உணவிலே சேர்த்துக் கொள்ள முடியும். இவை இயற்கையான பாதுகாப்பான நிறை உணவுகளாகும். வெங்காயம், உள்ளி, இயற்கையான வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை நீரிழிவு, இருதய நோய் உள்ளவர்கள் கூட போதியளவு உண்ண முடியும். சுகதேகிகளும் நோய்க்கு ஆட்பட்டவர்களும் உணவை சுவையானதாகச் சமைத்து உண்ணும் பொழுது அவர்களின் உடல், உள ஆரோக்கியம் மேம்படும்.

## 12 வயது கடந்த அனைவரும் குருதி குளுக்கோஸின் அளவைச் சோதித்துப் பார்த்துக் கொள்வது நல்லது

இளம் வயதினருக்கும் தற்பொழுது அதிகளவில் நீரிழிவு நோய் ஏற்பட்டு வருவதால் இதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கு அனைத்து இளம் வயதினரும் குருதி குளுக்கோஸின் அளவை சோதித்து பார்த்துக் கொள்ள வேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

சிறுவர்களுக்கும் இளம் வயதினருக்கும் ஏற்படும் நீரிழிவு நிலையை உடனடியாகப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய அவசரத்தேவை இருக்கிறது.

காரணம் 40 வயது கடந்து ஏற்படும் நீரிழிவு நோயுடன் ஒப்பிடும் பொழுது இளவயதில் ஏற்படும் நீரிழிவு நோயின் போது இரத்தக்குழாய்கள் பாதிக்கப்படும் வீதமும் உடல் பாதிப்பு வீதமும் அதிகம் என ஆராய்ச்சிகள் சொல்கின்றன.

இதன்காரணமாகவே இளவயது நீரிழ்வு நோயாளர்களை ஆரம்பத்திலேயே கண்டறியும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. நீரிழிவு நோயின் ஆரம்ப நிலைக்கட்டுப்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்பது சம்பந்தமாக பல ஆய்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆய்வுகளின் முடிவுகளின்படி நீரிழிவு நோயின் ஆரம்பகால கட்டுப்பாடே அதிக முக்கியமானது என்பது தெரிய வந்திருக்கின்றது. நீரிழிவு நோய் தோன்றிய ஆரம்ப காலத்தில் இது சிறந்த முறையிலே முற்றாகக் கட்டுப்படுத்தப்படுமாயின் இதன் அனுகூலங்கள் பல்லாண்டு காலம் நீடிப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்துவரும் காலங்களில் நீரிழிவு நோயின் கட்டுப்பாடு குறைவாக இருந்தாலும் ஆரம்ப நிலைக் கட்டுப்பாட்டின் அனுகூலங்கள் தொடர்வது ஒரு புதுமையான நிகழ்வாகும். இதனை மெற்றாபோலிக் மெமறி என்று சொல்லுவார்கள்.

எமது பிரதேசத்திலே நீரிழிவு நோயின் ஆரம்ப கட்டத்திலே கவனக்குறைவாக இருந்துவிட்டு நோய் கடுமையடைந்த பின்னர் மருந்தெடுக்க நினைக்கும் ஒரு மனோநிலையையே காணமுடிகின்றது. இதன் காரணமாக்வே பல எதிர்மறையான விளைவுகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே 12 வயது கடந்த அனைவரும் ஒரு தடவையேனும் தமது குருதி குளுக்கோஸின் அளவை சோதித்துப் பார்க்க வேண்டும். அது அதிகரித்துக் காணப்படின் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று உரிய சிகிச்சையைப்பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆரம்பம் முதலே இதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்போமாயின் நோயின் தாக்கமின்றி சாதாரண வாழ்க்கை வாழ முடியும்.

## வேகநடை



**ஆ**ரோக்கியமான ஒவ்வொருவரும் 30 நிமிடங்கள் வேகநடையை உடற்பயிற்சியாக செய்து வருவார்களாயின் அவர்கள் பல தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவர்.

வேகநடை என்பது பொதுவாக 5 கிலோ மீற்றர் / மணி என்ற வேகத்தில் நடப்பது என்று பொதுவாக வரைவிலக்கண்ப்படுத்தப்படுகிறது. 30 நிமிடங்கள் 5 கிலோ மீற்றர் / மணி என்ற வேகத்தில் நடப்போமாயின் எம்மால் 2.5 கிலோ மீற்றர் தூரம் நடக்க முடியும்.

சராசரியாக நிமிடத்திற்கு 110 அடிகள் எடுத்து வைப்போமாக இருந்தால் மேற்குறிப்பிட்ட வேகத்தை எம்மால் பேண முடியும். நேரம் போதாமல் இருக்குமாயின் இதனை 15 . 15 நிமிடங்களாகவும் பிரித்துக் கொள்ளலாம்.

இந்த வேகநடையை அமைதியான இயற்கையான சூழலில் செய்வோமாயின் அது மனஅமைதிக்கும் உறுதுணையாக அமையும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை ஒழித்ததன் மூலமே அனைவரும் நிம்மதியாக வாழ்கின்றனர்

## இராணுவத் தளபதி விக்கும் லியனகே

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை இல்லாதொழித்ததன் மூலம் தேசத்தை ஒன்றிணைத்ததுடன் நாட்டில் அனைவரும் சமாதானமாக வாழ வழிவகுத்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே தெரிவித்துள்ளார்.**

இராணுவ நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ள அவர், மூன்று தசாப்த கால யுத்தத்தின் போது நாடு முழுவதிலும் உள்ள மக்கள் சொல்லொணா சிரமங்களையும் துன்பங்களையும் அனுபவித்தார்கள்.

அதேவேளை, விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததன் பின்னர் நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக இராணுவ வீரர்கள் பெருமளவில் பங்களித்தார்கள் என்றும் இதனை இலங்கையர்கள் தொடர்ந்தும் நினைவில் கொள்ள வேண்டும்.

பயங்கரவாதத்தை ஒழித்தல், பேரிடர் மற்றும் கொரோனா தொற்றுநோய் கட்டுப்பாடு ஆகியவற்றின் போது, தங்கள் சொந்த உயிருக்கு ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல், இராணுவம், மீட்பு மற்றும் உதவிக்கு



வந்தது என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். (4)

# திரிபோஷா உற்பத்திக்காக அரசு வரிச்சலுகை

(கொழும்பு)

திரிபோஷா உற்பத்திக்கான சோளத்தை இறக்குமதி செய்வதற்கான வரிச் சலுகையை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

லங்கா திரிபோஷா நிறுவனத்திற்கு இந்த வரிச் சலு கைகள் வழங்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் சோளத்திற்கு 75 ரூபாவாக இருந்த விசேட வர்த்தக வரியை 25 ரூபாவாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வரித் திருத்தம் கடந்த 18 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பேரீச்சம்பழம் இறக்குமதிக்கு வழங்கப்பட்டு வந்த வரிச்சலுகை கடந்த 18 ஆம் திகதி முதல் நீக்குவதற்கு நிதி அமைச்சகம் நடவடிக்கை எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# குடிபோதையில் வாய்த்தர்க்கம் தந்தையைக் கொன்ற மகன்

(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தில் குடிபோதையில் மகன் தன் தந்தையை அடித்துக் கொன்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் வெலிப்பன்னை பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தந்தையும் மகனும் மது அருந்தி விட்டு வீடு வந்திருந்த நிலையில் இருவருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள் ளது.

இதன்போது தந்தை மீது மகன் மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக அதே இடத்தில் 73 வயதான தந்தை உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து 32 வயதான மகன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (4)

# 300 இலங்கை மாணவர்களுக்கு மகாத்மா காந்தி புலமைப்பரிசில்கள்

(கொழும்பு)

இலங்கை முழுவதிலும் உள்ள 25 மாவட்டங்களைச் சேர்ந்த 300 உயர்தர மாணவர்களுக்கு மகாத்மா காந்தி புலமைப்பரிசில்கள் இந்திய உயர்ஸ்தா னிகர் கோபால் பாக்லே, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரால் வழங் கப்பட்டுள்ளது.

இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் ஒரு மாணவருக்கு 2,500 ரூபாய் வழங்கப்படவுள்ளது. கொவிட் தொற்று காரணமாக இந்த ஆண்டு 2021 - 2022 என இரு தொகுதி மாணவர்களுக்கும் ஒரே சந்தர்ப்பத்தில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன.

புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு இதன் போது வாழ்த்து தெரிவித்த உயர்ஸ்தானிகர், இரு நாடுக ளிலும் உள்ள இளைஞர்களின் பிரகாச மான எதிர்காலத்திற்காக கல்வித் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கியத் துவத்தை வலியுறுத்தினார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடை யிலான நெருங்கிய கலாசாரத் தொடர்பு களை எடுத்துக்காட்டிய அவர், இந்தியா வில் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படு த்திக் கொள்ளுமாறு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார். (4)

# காலாவதியான ரின்மீன்களை விற்ற அறுவர் கைது

(கொழும்பு)

காலாவதியான ரின்மீன்களை விற்பனை செய்த சீனப் பிரஜை உட்பட ஆறு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை பேலியகொட பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ரின்மீன்களின் பெறுமதி 80 இலட்சம் ரூபாவிற்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் இவற்றை விற்பனை செய் வதற் கு வேறொரு நிறுவனத்தின் பெயரையும் அவர்கள் பயன்படுத்தி உள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணை களில் தெரியவந்துள்ளது. (4)


## மெட்டி ஒலி திருமண சேவை

ஐரோப்பாவிலுள்ள மணமகன்கள் (சூரிய, செவ்), மணமகளுக்கு பட்டப்படிப்பு படித்த மணமகள்கள், மணமகன்கள் தேவை. உங்கள் தகுதிக்கு ஏற்ற மணமகள், மணமகன் எல்லா நாட்டிலும் பார்த்துத் தரப்படும்.

076 475 2219
074 026 6554



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 R.C<br>உயரம்:5' 8<br>தகைமை/தொழில்: Hotel work<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13538 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 40<br>உயரம்:5' 6<br>தகைமை/தொழில்:-B.C.A (India)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ:G/13625 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 24<br>உயரம்: 5' 4<br>தகைமை/தொழில் முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் உள்ள பெண்<br>தொ.இ: B/13542 | பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா: 17 1/4<br>உயரம்:5' 6<br>தகைமை/தொழில் M.B.B.S (India)<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், எஞ்சினியர், கணக்காளர்<br>தொ.இ:G/13629 |
| பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 2 இல் சூரி, செவ்<br>தகைமை/தொழில்: BSc, msc civil engineerig (UK)<br>உயரம்: 5' 10<br>எதிர்பார்ப்பு: உயர்படிப்பு<br>தொ.இ: B/13547 | பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 54 3/4 இல் சூரி, செவ்வாய்<br>உயரம்: 5' 6<br>தகைமை/தொழில்: நுண்கலை பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ:G/13635 |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 42<br>உயரம்: 5' 7<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ்<br>தொ.இ: B/13553 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 19 1/4 12 இல் சூரி, செவ்<br>உயரம்: 155 cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ:G/13642 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மாரை புரட்டிய மோக்கா புயல் பலி எண்ணிக்கை 145 ஆக உயர்வு



(நெய்பியிடாவ்)

வங்கக் கடலில் உருவான மோக்கா புயல் வங்காள தேசம்-மியன்மார் இடையே கரையைக் கடந்தது.

இந்த அதிதீவிர புயல் வங்காளதேச-மியன்மார் எல்லையில் உள்ள கடலோரப் பகுதிகளை பந்தாடியது. புயல் கரையைக் கடந் தபோது வங்காள தேசம், மியன்மாரின் கடலோர பகுதிகளில் பலத்த காற்றுடன் கனமழை கொட்டித் தீர்த்தது.

இதனால் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வங்காளதேசத்தின் காக்ஸ் பஜார் மற்றும் சட்டோகிராம் நகரங்களில் இருந்து சுமார் 5 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். இதேபோல், மியன் மாரின் கியெவுக்பியு நகர் உட்பட பல கடலோரப் பகுதிகள் புயலால் கடும் பாதிப்பைச் சந்தித்தன.

அங்கும் புயல், மழை, வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். இந்நிலையில், மியன் மாரில் மோக்கா புயலால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 145 ஆக உயர்ந்துள்ளது. (4)

# வியாழனில் விரதம் இருக்கும் இங்கிலாந்து பிரதமர் ரிஷிசுனக்

(லண்டன்)

பிரிட்டன் பிரதமரான ரிஷி சுனக் வியாழக்கிழமைகளில் விரதம் இருப்பதாக அவரது மாமியார் சுதா மூர்த்தி கூறிய தகவல் தற்பொழுது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

ரிஷி சுனக் இங்கிலாந்தில் இருந்தாலும், அவர் மதத்தைத் தீவிரமாகப் பின்பற்றி வருகின்றார். மேலும், தாம் அனைத்து நல்ல காரியங்களையும் வியாழக்கிழமையில் ஆரம்பிப்போம் எனவும் கூறியுள்ளார்.

இன்போசிஸ் நிறுவனத்தைக் கூட வியாழக்கிழமையே ஆரம்பித்ததாகவும் அனைத்து நல்ல காரியங்களையும் வியாழனிலே ஆரம்பிப்பதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன், ராகவேந்திரா சுவாமிக்காக வியாழக்கிழமை விரதம் இருப்பதாகவும் அதனை மருமகன் ரிஷி சுனக்கும் பின்பற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார். (4)

# சீனா- வியட்நாம் எல்லையில் விபத்து - 11 பேர் உயிரிழப்பு

சீனா-வியட்நாம் எல்லையில் நேற்று முன்தினம் நடந்த சாலை விபத்தில் ஒன்பது வியட்நாம் குடிமக்கள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் குவாங்சி ஜுவாங் பிராந்தியம் ஜிங்சி நகரில் உள்ள மலைப்பகுதியில் வான் சென்று கொண்டிருந்தபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்த நிலையில், 3 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் சீனாவைச் சேர்ந்த ஓட்டுநர், உதவியாளர், இரண்டு வியட்நாம் பிரஜைகள் ஆவர்.

சாலை விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர். (4)

# ஒரு கோடி கொடுத்தால் விண்வெளியில் திருமணம்

(வோஷிங்டன்)

பூமிக்கு மேலே விண்வெளியில் திருமணம் செய்யும் சேவையை அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்பேஸ் பெர்ஸ்பெக்டிவ் என்ற நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதற்கு ரூ.1 கோடி கட்டணமாக வசூலிக்கப்படும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இளைய தலைமுறையிடம் தங்கள் திருமணத்தில் ஏதாவது ஒரு புதுமையை புகுத்த வேண்டும் என்ற ஆர்வம் ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது.

அந்த வகையில் அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் ஸ்பேஸ் பெர்ஸ் பெக்டிவ் என்ற நிறுவனம் ஒரு படி மேலே சென்று விண்வெளியில் திருமணம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

2024 ஆம் ஆண்டு தொடங்கவுள்ள இத்திட்டத்தில் கலந்து கொள்ள ஆயிரக்கணக்கானோர் இப்போதே முண்டியடித்துக் கொண்டு தங்கள் பெயர்களை பதிவு செய்து வருகின்றனர். (4)

# வைகாசி மாத இராசி பலன்கள் 15.05.2023-15.06.2023

## துலாம்

**நீதிக்கும், நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் துலாம் இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் மாதத் தொடக்கத்தில் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே கேதுவும், சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரித்து சர்ப்ப தோஷத்தை உருவாக்குகிறார்கள். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறும். சுபகாரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடை அகலும். பொருளாதார நிலை திருப்தி தரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.

**ராகு -கேது சஞ்சாரம்**

பின்னோக்கி நகரும் கிரகங்களான ராகுவும், கேதுவும் மாதத் தொடக்கத்திலேயே சர்ப்ப தோஷ அமைப்பில் இருக்கிறார்கள்.

கேது ஜென்மத்திலும் ராகு சப்தமத்திலும் இருப்பதால் ஏற்றமும் இறக்கமும் கலந்த வாழ்க்கை அமையும். எதிரிகள் பலம் கூடுதலாகத்தான் இருக் கும். வரவு வரும் முன்னதாகவே செலவு காத்திருக்கும். வாய்ப்புகள் வந்தாலும் அதை உபயோகப்படுத்திக்கொள்ள இயலாமல்போகலாம். சம்பள உயர்வு காரணமாக குடும்பத்தில் ஓரிருவர் வெளியேறிச் சென்று வேலை பார்க்க நேரிடலாம். குரு பார்வை உங்கள் இராசியில் பதிவதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும்.

**கடக - சுக்கிரன்**

வைகாசி 16 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள நீச்சம் பெற்ற செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோக "த்தை உருவாக்குகிறார். உங்கள் இராசிக்கு தன- சப்தமாதிபதியான செவ்வாய், உங்கள் இராசி நாதன் சுக்கிர னோடு சேரும் பொழுது அற்புதமான பலன்கள் கிடைக்கும். நீங்கள் செய்ய நினைத்த காரியத்தை மறுகணமே செய்து முடிப்பீர்கள். இனத்தார் பகை மாறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள்.

**ரிஷப - புதன்**

வைகாசி 18 ஆம் திகதி புதன் ரிஷப இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 12-க்கு அதிபதி 8 ஆம் இடத்திற்கு வருவது மிக அற்புதமான நேரமாகும். "விபரீத ராஜ யோக" அடிப்படையில் தடைபட்ட பணிகள் துரிதமாக நடைபெறும்.

உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவோடு திடீர் முன்னேற்றம் காண்பீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். அதனால் பலனும் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டு.

பொதுவாழ்வில் உள்ள வர்களுக்கு பொறுப்புகள் கூடும். தலைமைப் பதவிகள் தேடிவரும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு விடிவு காலம் தொடங்கிவிட்டது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளால் நன்மை ஏற்படும்.

கலைஞர்களுக்கு அடுக்கடுக்காக ஒப்பந்தங்கள் வரலாம். தேக்க நிலை மாறி, பெண்கள் அனைவரும் ஊக்கத்தோடு செயற்படும் நேரம் இது. உடன் இருப்பவர்கள் உறுதுணையாக இருப்பர். தம்பதிகளின் ஒற்றுமை பலப்படும். பணிபுரியும் பெண்களுக்கு பாராட்டும், புகழும் கூடும்.

## விருச்சிகம்

**சொல்லும் சொற்களை வெல்லும் சொற்களாக்கும் விருச்சிக இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் பாக்கிய ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். தொழில் ஸ்தானாதிபதி சூரியன் உங்கள் இராசி யைப் பார்க்கிறார். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். துணிந்து நீங்கள் எடுத்த முடிவுகளால் வெற்றிக் கனியை எட்டிப்பிடிப்பீர்கள். உதவிக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை உயரும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு வளர்ச்சி அதிகரிக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு.

**ராகு-கேது சஞ்சாரம்**

பின்னோக்கி நகரும் கிரகங்களான ராகுவும் கேதுவும் உங்கள் வாழ்க்கையை முன்னோக்கிச் செல்ல வழிகாட்டுகின்றனர். 6 இல் ராகு குருவுடன் இணைந்திருப்ப தால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலை மோதும். தொழில் வெற்றிநடை போடும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். புகழ் மிக்கவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பீர்கள்.

கொடுக்கல் -வாங்கல்களில் சுமுக நிலை ஏற்படும். அணிகலன்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கேது பலத்தால் ஆன்மிகப் பயணங்கள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர்.

**கடக - சுக்கிரன்**

வைகாசி 16 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள நீச்சம் பெற்ற செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோக"த்தை உருவாக்குகி றார். உங்கள் இராசி நாதன் மங்கள யோகம் பெறுவதால் குடும்பத்தில் மங்கல ஓசை மனையில் கேட்கும் வாய்ப்பு உண்டு. வருமானம் திருப்தி தரும். தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். கூட்டாளிகள் லாபத்தைக் கொண்டு வந்து சேர்ப்பர். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்த கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புதிய திருப்பங்களைக் காண்பீர்கள்.

**ரிஷப - புதன்**

வைகாசி 18 ஆம் திகதி, ரிஷப இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டம - லாபாதிபதியானவர் புதன். லாபாதிபதி புதன் தொழில் ஸ்தானத்தில் சூரியனோடு இணைந்து உங்கள் இராசியைப் பார்ப்பது, ஒரு பொன்னான நேரமாகும். எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டு. இல்லம் தேடிச் சுபச் செய்திகள் வந்த வண்ணமாக இருக்கும். தெளிவான சிந்தனையோடு தேர்ந்தெடுத்த தொழிலில் லாபம் குவிப்பீர்கள். அசையா சொத்துகள் வாங்கும் முயற்சி கைகூடும். வெளிநாட்டிலிருந்து ஆதாயம் தரும் அழைப்புகள் வரலாம். புயல் வேகத்தில் முன்னேற்றம் காணும் நேரமிது. பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு தலைமைப் பொறுப் புகள் தானாகத் தேடிவரலாம். தொழில் செய்பவர்களுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்க ளுக்கு ஊதிய உயர்வும் பதவி உயர்வும் கிடைக்கும். கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர். வருமானம் உயரும். பெற்றோர்களின் ஆதரவும் கூடும். பெண்களின் பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். மங்கல ஓசை மனையில் கேட்க வழி பிறக்கும். கணவன் - மனைவிக்குள் பாச மும் நேசமும் கூடும். உடன் பிறப்பு களை அனுசரித்துச் செல்வது நல்லது. பணிபு ரியும் பெண்களுக்கு சம்பள உயர்வு கிடை த்து சந்தோஷம் ஏற்படும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் கிடைக்கும். அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு வெற்றிகாண முயல வேண்டும்.
– மெகல்லன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முதலிடுகின்ற சந்தர்ப்பங்களை தவறவிட்டு விடாதீர்கள்

நாடு கந்தறுந்து காவடி எடுக்கின்றது. உள்நாட்டு யுத்தத்தில் எல்லாச் செல்வங்களையும் இழந்து நின்ற இலங்காபுரியில் அரியணை ஏறியவர்கள் இருந்த சொச்சங்களையும் ஏப்பமிட, பிச்சை எடுப்பதைத் தவிர வேறுவழியில்லை என்பதாக நிலைமை ஆயிற்று.

இப்போது அரசாங்கத்துக்கு முழுமையாகவும் பகுதியாகவும் உரித்துடைய நிறுவனங்களை விற்றுத் தீர்ப்பதென்ற கட்டத்துக்கு ஆட்சித் தரப்பு வந்துள்ளது.

இவ்வாறான நிறுவனங்களை வாங்கக் கூடிய பொருளாதார வசதி கொண்டவர்களாக நம் புலம்பெயர் தமிழ் உறவுகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதாவது அரசாங்கம் விற்றுத் தீர்ப்பதென முடிவு செய்துள்ள நிறுவனங்களைக் கொள்வனவு செய்கின்ற பொருளாதார வளம் சிங்கள மக்களிடம் இல்லை என்று கூறப்படுகிறது.

மாறாக, வெளிநாடுகளில் இருக்கக்கூடிய புலம்பெயர் தமிழ் மக்களால் மட்டுமே இந்த முதலீடுகளை மேற்கொள்ள முடியும் என்பதாகக் கருதப்படும் அதேநேரம், அரச முதலீட்டு நிறுவனங்களைப் புலம்பெயர் தமிழ் மக்களுக்கு விற்பனை செய்யக்கூடாது எனக் கோசம் போடுகின்ற சிங்களப் பேரினவாதிகளும் இருக்கவே செய்கின்றனர்.

இவை ஒருபுறமிருக்க, அரசாங்கம் விற்பனை செய்யவுள்ள நிறுவனங்கள் மீது புலம்பெயர் தமிழ் உறவுகள் முதலீடு செய்யக்கூடாது என்ற கருத்தியல் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் என்று கூறப்படுவோரால் முன்வைக்கப்படுகிறது.

இவ்வாறான கருத்தியலைக் கொண்டவர்கள் முதலீடு செய்யக்கூடிய; பொருளாதார வசதி உடைய புலம்பெயர் தமிழ் உறவுகளைக் கடுமையாகக் கண்டிப்பதையும் சமூக வலைத்தளங்களில் தமது எதிர்க்கருத்துக்களைப் பதிவேற்றம் செய்வதையும் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் முதலீடு செய்யக்கூடிய வல்லமை உடைய புலம்பெயர் தமிழ் உறவுகள் இலங்கையில் முதலீடு செய்யத் தயங்குகின்றனர்.

இங்குதான் அரச நிறுவனங்கள் மீது முதலீடுகளை மேற்கொண்டு அவற்றை இலாபகரமாக இயங்கவைத்து இந்த நாட்டில் தமிழர்களின் முதலீட்டுப் பலத்தையும் நாட்டின் பொருளாதார பலத்தின் பெரும்பகுதியைத் தமிழ்த் தரப்புகள் தம் வசம் வைத்திருப்பதையும் ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் காத்துக் கிடக்கிறது.

ஆக, இவ்வாறானதோர் சூழ்நிலையில், மேற்குறித்த முதலீடுகள் அவசியமானவை என்ற உண்மையை எடுத்துரைத்து கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ள வகை செய்தல் வேண்டும்.

## யாழ்.பல்கலை விரிவுரையாளர்கள் பேராசிரியர்களாக பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகவும், ஒருவர் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பேராசிரியர் ஒருவர் துறைக்குரிய இருக்கைப் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின்படி முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மனிதவள முகாமைத்துவத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) எஸ். எம். சி. மகேந்திரன் அலோசியஸ் மனிதவள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி பூ. ஐங்கரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும் விவசாய பீடத்தின் விவசாயப் பொருளியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.சூரியகுமார் விவசாயப் பொருளியலில் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இதே நேரம் முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தின் மனிதவள முகாமைத்துவத்துறையின் பேராசிரியரும் மனிதவள முகாமைத்துவத் துறைத் தலைவருமான பேராசிரியர் என்.கெங்காதரன் குறித்த துறைக்கான இருக்கை பேராசிரியராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ம-7,9)

### டெங்கை ஒழிக்க

## டிரோன் மூலம் மருந்து தெளிக்க நடவடிக்கை

(கொழும்பு)

பொது சுகாதார பரிசோதகர்களால் செல்ல முடியாத உயரமான கட்டிடங்களில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் நேற்று டிரோன் கமெராக்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டது. அத்தகைய கட்டிடங்களில் நுளம்புகள் தொற்றக்கூடியவை தண்ணீர் நிற்கும் இடத்திற்கு டிரோன் கேமராவைப் பயன்படுத்தி BTI துகள்களும் தெளிக்கப்பட்டன.

நாட்டில்தற்போது டெங்கு பரவும் சூழ்நிலை குறையும் வரை இந்த வேலைத் திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது. இதன்படி கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய இடங்களில் உள்ள ஒவ்வொரு வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும் உரிய ஆளில்லா விமானத்தை நாளாந்தம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வருடத்தில் இதுவரை 35,419 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (ம-7,9)

## மின்னல் தாக்கியதில் பதுளையில் ஒருவர் பலி

பதுளை – ரிதிமாலியத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மொறான பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது. குறித்த பகுதியிலுள்ள நீர் வடிகானுக்கு அருகில் குறித்த நபர் நின்றிருந்த சந்தர்ப்பத்தில் மின்னல் தாக்கியதாக தெரிவிக்கப்பகிறது. (ம-7,9)

## இந்திய கண் சொட்டு மருந்து கறுப்புப் பட்டியலில்

இலங்கையில் கண் சத்திரசிகிச்சைக்குப் பின்னர் பயன்படுத்தப்படும் இந்தியாவின் ப்ரெட்னிசோலோன் என்ற கண்சொட்டு மருந்தை கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ப்ரெட்னிசோலோன் கண் சொட்டு மருந்தினால்(Prednisolone Eye Drops) பல சிக்கல்கள் பதிவாகியது.

இதையடுத்து, உடன் அமுலுக்கு வரும் வகையில் பயன்படுத்துவதை நிறுத்துமாறு அனைத்து மருத்துவமனை பணிப்பாளர்களுக்கும் சுகாதார அமைச்சு அறிவித்தது.

அது தொடர்பில் நடத்தப்பட்ட ஆய்வக சோதனைகளில் இந்த கண் சொட்டு மருந்து மாசுபட்டுள்ளது உறுதியானது. (ம-7,9)

## இ.போ.ச பஸ் மோதியதில் 23 வயது இளைஞன் பலி

(மட்டக்களப்பு)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான்குளம் பிரதான வீதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி மோதியதில் 23 வயதுடைய இளைஞன்ஸ்தலத்திலேயே பலியானார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில், கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி வந்த ஏறாவூர் டிப்போவிற்குச் சொந்தமான பஸ் வண்டி கல்முனையில் பயணிகளை இறக்கி விட்டு மீண்டும் ஏறாவூர் டிப்போவிற்குத் திரும்பிக் கொண்டிருந்த நிலையில் கிரான்குளம் விஸ்ணு கோயிலுக்கு முன்னால் தூங்கிக் கொண்டிருந்த மனநிலை பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் 23 வயது இளைஞனை மோதிவிட்டுச் சென்றுள்ளதாக தெரியவருகிறது.

ஸ்தலத்திற்கு விரைந்த காத்தான்குடி பொலிஸ் நிலைய கோக்குவரத்து பொலிஸார் பஸ்ஸின் சாரதியை கைது செய்துள்ளதுடன் சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர். (ம-7,9)

## ஜீப் மோதியதில் மாணவி உயிரிழப்பு

(குருநாகல்)

பேருந்து நிறுத்தத்தில் காத்திருந்த 17 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் ஜீப் மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். நேற்றுக்காலை இந்த விபத்து குரு நாகல், உ/ஹமிய, டி.எஸ். சேனநாயக்க கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

விபத்தில் குறித்த பாடசாலையில் 11 ஆம் தரத்தில் கல்வி கற்கும் சித்துமினி ராஜகுரு என்ற 17 வயது மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனியார் வகுப்பில் கலந்துகொள்வதற்காக குருநாகலுக்கு செல்வதற்காக பேருந்திற்காக காத்திருந்த போதே குறித்த மாணவி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

வீதியில் பயணித்த ஜீப் ஒன்று சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி மாணவி மீது பாய்ந்து தொலைபேசி கம்பத்தில் மோதி நின்றது. சாரதி தூங்கியதால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விபத்து தொடர்பில் ஜீப் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

## திருமலையில் ரயில் விபத்து கடவை காவலாளி மரணம்

(திருகோணமலை)

திருகோணமலை- தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ரயில் கடவை காவலாளி ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளார். இவ்வனர்த்தம் நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை ஜெயபுரத்தைச் சேர்ந்த பீ.ஏ.றனசிங்க (63 வயது) என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது-திருகோணமலை பிறீமா ஆலையிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த ரயில் பத்தினி புறத்தில் உள்ள ரயில் கடவையை அண்மித்த போது காவலாளி உறங்கிக் கொண்டிருந்த நிலையில் வேகமாக சத்தத்தை அவதானித்து கடவையை மூடுவதற்காக சென்றுள்ளார். இந்நிலையில் வேகமாக சென்ற போது ரயிலுடன் மோதியதாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. (ம-7,9)

### மூன்றாம் பாலினத்தவர்கள்

## அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் பெறுதல் தொடர்பான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (Law and Society Trust - LST) நிறுவனத்தின் ஏற்பாட்டில் மூன்றாம் பாலினத்தவர்கள் அதிகாரபூர்வ தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் பெறுவதில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாணம் சர்வோதய மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வட மாகாணத்திலுள்ள மூன்றாம் பாலினத்தவர்கள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்பினர்கள் ஆகியோர் பங்குபற்றி இருந்தனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா கட்டையர் குளம் காடழிப்பு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

(வவுனியா)

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் இடம்பெற்ற காடழிப்பு தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச அதிபர் பிரதேச செயலாளருக்கு கடிதம் ஊடாக கோரியுள்ளார்.

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் வனஇலாகாவிற்கு சொந்தமான சுமார் 12 ஏக்கர் வரையிலான காடு கிராம அலுவலர் ஒருவரின் ஆதரவுடன் அழிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கட்டையர் குளம் கிராம அபிவிருத்தி சங்கம் தடுத்து நிறுத்தியதையடுத்து, அதில் முன்னின்று செயற்பாட்ட பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு எதிராக போலி முகநூலில் அவதூறை ஏற்படுத்தி பதிவுகள் இடப்பட்டிருந்தன.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர் கொழும்பு சி.ஐ.டி மற்றும் வவுனியா சைபர் கிரைம் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த கிராம அலுவலர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தியதை அடுத்து உண்மைகள் வெளியாகியிருந்தன.

இதன் தொடர்ச்சியாக கட்டையர்குளம் கிராம அபிவிருத்தி சங்கம் காடழிப்பு தொடர்பில் வவுனியா மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத்சந்திரவிடம் கொடுத்த முறைப்பாடு தொடர்பில், உடன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசனிடம் கோரியுள்ளார்.

இதேவேளை, அண்மைக் காலமாக பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சில கிராம அலுவலர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளுக்கு பிரதேச செயலகம் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (4)

## காற்றாலை மின் உற்பத்தி

# பொதுமக்கள் கருத்துக்களை கேட்கும் கலந்துரையாடல்



(முறிகண்டி)

கௌதாரிமுனை பகுதியில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை கேட்டறியும் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

குறித்த பகுதிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது குறித்த காற்றாலை அமைப்பது தொடர்பில் மக்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் நன்மை தீமைகள் தொடர்பில் அவர் கேட்டறிந்து கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் குறித்த காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்திற்கு அனுமதி கோரப்பட்டது.

குறித்த அனுமதிக்கு முன்னர் அவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து நன்மை தீமைகள் பற்றி அறிந்த பின்னரே அனுமதி வழங்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்றையதினம் குறித்த பகுதிக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் பிரதேச மக்களிடம் கலந்துரையாடி விடயங்களை பெற்றுக் கொண்டதாக ஊடகங்களிற்கு தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த காற்றாலை அமைப்பதனால் தமது மீன்பிடி தொழில் பாதிக்கப்படும் எனவும் அதனை தாம் எதிர்ப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (4-100-316)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 500 கிலோ கடலட்டை மீட்பு

(அராலி)

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் அருகே சட்ட விரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 2.5 லட்சம் இந்திய ரூபாய் பெறுமதியிலான 500 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளை பறிமுதல் செய்த மரைன் பொலிஸார் கடல் அட்டைகளை பதுக்கி வைத்திருந்த நபரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

இந்தியா தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுக கடற்கரை அருகே உள்ள பூலித்தேவன் நகரில் சட்ட விரோதமாக கடல் அட்டைகள் பிடித்து அதை அவித்து பதுக்கி வைக்கப்படுவதாக இராமேஸ்வரம் மரைன் பொலிஸ் பரிசோதகரிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் மரைன் பொலிஸார் அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது சுமார் 500 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் அவித்து பதப்படுத்தப்பட்டு பிளாஸ்ரிக் கொள்கலன்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

பறிமுதல் செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டதா? என்ற கோணத்தில் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

# மாணவர்கள் மத்தியில் போதைப் பாவனை கல்வி அமைச்சு விசேட கவனம்

(கொழும்பு)



பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு ஆளாவதைத் தடுப்பதற்கும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் விழிப்புணர்வை மேலும் விரிவுபடுத்துவதற்கும் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளை மேலும் திறம்பட முன்னெடுப்பதற்கும் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கல்வி அமைச்சர் பிரேமஜயந்த பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

பாடசாலை முறையின் தற்போதைய நிலை தொடர்பில் விரிவான கலந்துரையாடல் நேற்று கல்வியமைச்சில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இடம்பெற்றது.

அத்துடன் பாடசாலை பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடை விநியோகம் தொடர்பிலான விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் டெங்கு தொற்றுநோயை கட்டுப்படுத்தும் முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பாடசாலைகளில் மதிய உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்து இங்கு கேட்டறிந்ததுடன், சத்துணவுத் திட்டம் எதிர் காலத்திலும் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தரம் ஒன்றிலிருந்து பாடசாலை மாணவர்களிடம் ஆங்கிலத்தில் பேசுவதற்கான நடைமுறை ஆரம்பமானது.

2023 ஆம் ஆண்டின் முதலாம் தவணை தொடக்கத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுவதுடன், தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு அதனை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. (4)

# மாடு மீது தாக்குதல்

(அராலி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் தன்னுடைய வளர்ப்பு மாட்டை சித்திரவதை செய்துள்ளார்.

வயலில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த குறித்த மாடு தொடர்ச்சியாக சத்தம் போட்டுக்கொண்டு இருந்ததனால் மாட்டின் உரிமையாளர் அந்த மாட்டினை இவ்வாறு தாக்கியுள்ளார்.

இதனை அவதானித்த ஊரவர்கள் [illegible] கழிந்தனர். (4-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 350 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 170 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 140 | 180 | 200 |
| தக்காளி | 350 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 350 | 400 | 400 | 400 |
| கரட் | 200 | 360 | 400 | 400 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 160 | 140 | 80 | 250 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 360 | 250 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 140 | 150 |
| பாகற்காய் | 400 | 1000 | 600 | 500 |
| வெண்டக்காய் | 160 | 160 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 320 | 360 | 400 | 450 |
| பீற்றூட் | 260 | 300 | 300 | 400 |
| கறிமிளகாய் | 350 | 350 | 300 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 500 | 1000 |
| போஞ்சி | 550 | 500 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 450 | 250 | 400 | 450 |
| கீரை – 1 பிடி | 120 | 100 | 150 | 150 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 250 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 350 | 800 | 600 | 600 |
| முள்ளங்கி | 80 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 40 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தரின்...

கண்டி கிழக்கைச் சேர்ந்த மகேந்திர ஜா பரந்தாமன் (வயது-37) என்ப ாவார்.

வீட்டில் தனிமையில் வசித்து வந்த நூக்கில் தொங்கிய நிலையில் லமாக காணப்படுவதாக வல்வெட் டித்துறை பொலிஸாருக்கு தகவல் ங்கப்பட்டது.

ம்பவ இடத்திற்கு சென்ற பருத் ந்துறை மரண விசாரணை அதிகாரி தானந்தன் சிவராஜா விசாரணை களை மேற்கொண்டு சடலத்தை பருத் த்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கு மாறு வல்வெட்டித்துறைப் பொலிஸா ருக்கு அறிவுறுத்தினார். (ம-7,9,60)

## இலத்திரனியல்...

குடியகல்வு திணைக்களம் இந்த அறி விப்பினை வெளியிட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் ஏற் கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மட்டுமன்றி பல் வேறு உலக நாடுகளும், இலத்திரனி யல் கடவுச்சீட்டுக்கான வசதிகளை வழங்க முன்வந்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரி வித்துள்ளார். (ம-7,9)

## கடன் மறுசீரமை...

வரை இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் ஜி7 நாடுகளின் கூட்டணி வெளியிட்டுள்ள கூட்டறிக் கையில் இலங்கை தொடர்பான நட வடிக்கைக்கு வரவேற்பு தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-7,9)

## வடக்குக்கு...

கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள் ளார்.

அவ்வாறு வட மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளுக்கு நியமனத் திற்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்களை வட மாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வட மாகாண கல்வி அமைச் சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரியில் பார்வை யிட முடியும்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களை தயாரிப்பதற்கு ஏதுவாக 27.05.2023ஆம் திகதி சனிக் கிழமை வட மாகாண கல்வி அமைச் சில் ஆவணங்கள் சேகரிப்பதற்கான நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ள தனால் இணையத்தளத்தில் குறிப் பிடப்பட்டுள்ள நேர ஒழுங்கிற்கமை வாக கீழ்வரும் ஆவணங்களுடன் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

அந்தவகையில்,

01. தேசிய அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை யின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

02. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்

03. பூரணப்படுத்தப்பட்ட தகவல் படிவம் (இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்)

04. விவாகச் சான்றிதழ் (திருமண மான பெண்கள் மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும்) (ம-7,9)

## வடக்குக் கிழக்கு...

களிலும் நடைமுறைப்படுத்தப்படும் தொல்பொருள் தலங்கள் சம்பந்தமான திட்டங்களை அவ்வாறே தொடர்ந்து முன்கொண்டு செல்லல் மற்றும் வெளி தரப்புகளில் இருந்து பெற்றுக்கொள் ளப்படும் உதவிகளை அதற்காகப் பயன்படுத்தல் தொடர்பிலும் அவ தானம் செலுத்த வேண்டும் என கோரப் பட்டுள்ளது.

இனவாத மற்றும் மதவாத பிரச் சினைகள் ஏற்படுவது போன்றதான பிம்பத்தை, நாட்டின் பல்வேறு பிர தேசங்களில் இடம்பெறுகின்ற சம்பவங் களின் மூலம் காணக்கூடியதாக உள் ளது.

எனவே அவற்றைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பில் தாங் கள் விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாக அஸ்கிரிய மகா விகாரை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,9)

# பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

பட்டதாரிகளை ஆசிரியர் சேவை யில் இணைத்துக்கொள்வது தொடர் பில் கல்வி அமைச்சு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய பாடசாலைகளில் நில வும் அதிபர் வெற்றிடங்களை நிரப் பவும், பட்டதாரிகளை ஆசிரியர் சேவை யில் இணைத்துக்கொள்ளவும் அவசி யமான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சில் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலின்போது கல்வி யமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த கலந்துரையாடலில், நாட்டில் பாடசாலை கட்டமைப்பின் தற்போதைய நிலைமை குறித்து ஆரா யப்பட்டுள்ளது. (ம-7,9)

## அரசியல் தீர்வு...

மக்கள் அபிவிருத்தியை மாத்திரம் எதிர்பார்க்கவில்லை.

போர் ஏன் மூண்டதோ அதற்கான தீர்வையும் அவர்களே விரும்புகிறார் கள்.

இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடு களின் விருப்பமும் இதுவாகவே உள் ளது.

எனது விருப்பமும் அதுவே. இலங் கையில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 14 வருடங்கள் நிறைவடைந்து விட்டன.

இன்னும்தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவில்லை.

தீர்வை நாம் விரைந்து காண வேண் டும். தமிழ்க் கட்சிகளுடன் நான் ஆரம் பித்துள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும் என்ற முழு நம் பிக்கை எனக்கு இருக்கின்றது.

இந்த விட யத்தில் தமிழ்க் கட்சிகளும் முழு மையான ஒத்து ழைப்பை வழங்க வேண்டும் என் றார். (ம-7,9)

## திங்கள்...

முன்னாள் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மே 15ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பதவி நீக்கம் செய்யப்பட்டநிலையில் மே 17ஆம் திகதி பி.எஸ்.எம்.சாள்ஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவி னால் வடக்கு மாகாண ஆளுநராக நிய மிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ம-7,9)

## வவு...

இதேதரப்புக்கள், இதேபோன்ற திட்டத்தை முன் னெடுத்த போதும், அது வெற்றியளிக்க வில்லை. அப் போதைய வட மாகாண சபை அதை நிராகரித் திருந்தது.

அத்துடன், அப்போது வவு னியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தி லும் அனுமதி மறுக்கப்பட்டது.

தற்போது இந்த திட்டம் மீள வும் கையிலெடுக் கப்பட்டுள்ளது.

எனினும், இந்த திட்டத்தின் பின் னணியில் சீன முதலீடு இருக் கிறது என்ற சந் தேகம் இந்தியத் தரப்புக்கு உள்ள தையும், தமது அதிருப்தியை அரசுக்கு தெரி வித்ததாக தெரி விக்கப்படுகின் றது. (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1575
துலாம் 8 4 4 0 1 5

தன நிதானய
திகதி 2023.05.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1150
M 23 29 43 52

கொவிசெத
திகதி 2023.05.20
சீட்டிழுப்பு இலக்கம் 3362
K 42 46 56 63

மெகா பவர்
திகதி 20/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1468
D 22 22 46 44 49

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.05.20
சீட்டிழுப்பு இலக்கம் 429
மீனம் 29 42 48 55 மீனம்

மஹஜன சம்பத
திகதி 2023/05/20
சீட்டிழுப்பு இலக்கம் 5120
W 1 7 6 0 2 8

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2094
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.05.20
தினம் சனிக்கிழமை
C 38 47 57 73
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,479,240/-

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.05.20
வெற்றி வாரம்: 4255
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,874,620.00
02 13 55 62 A

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,171,919.20
திகதி 2023-05-20
வெற்றி வாரம் 3806
வர்ணம் இள நீலம்
40 43 57 61
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,707,940/-

O 14 48 56 57 72
1270
2023.05.20 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 331,332,675.00

சංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 595
திகதி 2023-05-20
வர்ணம் ஆரஞ்சு நிறம்
Y 10 27 40 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 19,967,704.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 1920
சீட்டிழுப்பு திகதி : 2023.05.20
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.51,024,567.20
07 30 42 73 L


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கீரிமலையில் 56-பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- கீரிமலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோவில் (நகுலேஸ்வரம்) இருந்து1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை - கடல், தெற்கு எல்லை - பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் – கீரிமலை).

(15571)

**076 911 9371**
**077 874 8135**

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



077 544 8503

(15537)

## IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
**Brown Rd, Jaffna.**
077 798 9830 By:- B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக் கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

(15559)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜேர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-6593)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

### நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-6592)

## விற்பனைக்கு

**9 Kw ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு.**

(15576)

**077 773 0567**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 46 வயது தனியார் நிறுவனத்தில் நிதி வசூலிப்பாளராக உள்ள மணமகனுக்கு 45 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை.

படம், குறிப்பு விபரத்தை whatsapp க்கு அனுப்பவும்

(15574)

**077 601 5640**

## இராஜ மருத்துவம்

குழந்தைகள் கிரந்தி, அவியல், சளி, இருமல், செவ்வாப்பு, கிரந்தி முட்டு கணை நோய்களுக்கும் குளோகோமா, சூதக வலி, ஆனந்த வாயுவுக்கும் சிகிச்சை பெறவும், கோரோசனை மாத்திரை கிரந்தி எண்ணெய் பெற்றுக் கொள்ளவும்.

பேராசிரியர் Dr.K. பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்

(C-6586)

076 274 4488
வல்லை வீதி, சங்கானை.

## வேலை வாய்ப்பு

**வல்வெட்டித்துறையில் இயங்கும் Village Hotel and Indian Restaurant இற்கு வேலையாட்கள் தேவை.**

(15968)

**076 830 3931**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 55 வயது வியாபாரம், விவசாயம் செய்யும் மணமகனுக்கு 45 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை.

படம், குறிப்பு விபரத்தை Whatsapp இற்கு அனுப்பலாம்.

(15564)

**075 494 2505**

## காணி விற்பனைக்கு

இராசபாதை ரோட்டில் 27 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.(சுற்றுமதிலுடன்)

(15575)

**077 773 0567**

## காணி விற்பனைக்கு

பளை பஸ்நிலையம் மற்றும் பளை புகையிரத நிலையம் A9 வீதியிலிருந்து 800m தூரத்தில் இரண்டு பக்க வீதியுடன் 05 பரப்பு காணி விற்பனைக்கு.

- குடியிருப்பு பகுதி
- பரப்பு ஒன்றின் விலை 7 இலட்சம்.

(15567)

**077 173 9856**

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20 . 03 . 1956

மறைவு
31 . 05 . 2022

அமரர் திருமதி

## சிவநேசன் சோதிமலர்

(மாமனிதர் சிவநேசன் அறக்கட்டளை நிறுவுனர்)

புன்னகை பூ ஒன்று உதிர்ந்து ஓராண்டு ஆனதுவோ அம்மா -எம்
வார்த்தைகள் மௌனித்து நீள்கிறது உம் நினைவுகளை சுமந்து...
கண்முன்னே வாழ்ந்த காலம் இன்றெதிரில் நிழலாட
காலனவன் வந்தானோ எமைவிடுத்து உமை அழைக்க
கதிகலங்கி நிற்கின்றோம் ஆண்டொன்று ஆனபோதும்
கண்களிலே நினைவுகளாய் நீர் நிழலாட.....

யார்க்கரு, கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்

(C-6587)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 54 பரப்பு காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணத்தில் இருந்து அராலி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- யாழ் நகரில் இருந்து 1 ½ km தூரத்தில்.
- நான்கு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(15570)

**077 259 0391, 076 739 0413**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(15570)

**077 638 5683**
**076 755 8606**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 84 பரப்பு காணி விற்பனைக்கு

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(15570)

**076 436 5814**
**077 065 4525**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி ஆன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.